ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௮ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௪, புரட்டாசி அக்டோபர், 1953 | பரல் ௨

செந்தமிழண்ணல் பிரிவு

இவ் விசய ஆண்டு புரட்டாசித் திங்கள் க (17-9-53) ஆம் நாள் வியாழக்கிழமை மாலை மணி 7-45-க்குச் சென்னை நகரில் ஓர் பெருங் கொந்தளிப்பு! வானொலிநிலையங்கள் வாய்விட்டரற்றின! அறிஞர், தொழிலாளர், செல்வர், சமயக் கணக்கர், அரசியல் வினைஞர், வேறு பிறபிற சான்றோரெல்லாம் கதறினர்! பதறினர்! நெஞ்சு துணுக்குற்றனர்! கண்கள் நீரைக் கான்றன! ஏன்? செந்தமிழண்ணல் திரு வி கலியாணசுந்தரனார் இறையடியின்பப்பேறடைந்தமைக்காக. ஆ! உலகில் எத்தனை உயிர்கள் பிறக்கின்றன! இறக்கின்றன! இதற்காக மகிழ்வோ வருத்தமோ யாருங் கொள்வதில்லை.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் ஒரு சிலர் பிரிவுக்கு நாடும் ஏடும் கலக்கமுற்றுத் தம் அழுகையொலியை-வருத்தத்தை-வெளிக்குக் கொணர்ந்து கொட்டுகின்றன.

தொண்டுகள்

செந்தமிழன்னை தவப்புதல்வர் திரு. வி. க. அவர்கள் தந்நலமற்று 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதற்கேற்ப நாட்டுத்தொண்டு, மொழித்தொண்டு, சீர்திருத்தத் தொண்டு, சமயப்பொதுநெறித் தொண்டுகளில் ஈடுபட்டு என்னையும் உரிமையாக்கிய அன்புடைப் பெரியாராவர். இத்தகைப் பெரியார் தம் எக-ஆம் அகவைத் தொடக்கத்தில் நம்மைவிட்டுப் பிரிந்தார். அவர் தணந்தமைகேட்டுத் தமிழகப் பெருமக்கள், தொழிலாளர்கள், சீர்திருத்தச் செம்மல்கள்

யாவரும் தத்தம் மனம் மடிந்து சாம்பினர். அன்று மாலை மதியமும் தன் ஒளி மங்கிக்காட்டிற்று. வானமும் அழுதரற்றித் தன் கண்ணீராக மழைத்துளிகளைக் கொட்டிற்று. அன்று மண்ணும் மயங்கின, மரமும் கதறின எனின், அது மிகையன்று. கடல் கடந்து வாழும் தமிழர்களும் இச்செய்தியறிந்து துணுக்குற்று மாழ்கி மயங்கினர். தமிழ்நாடு முழுதும் தன் துன்பக் கண்ணீர் வடித்து வருந்திற்று.

இவர் நாட்டுக்கும், மொழிக்கும், கலைக்கும், தமிழர்நாகரிகத்துக்கும் செய்த தொண்டுகள் அளப்பரியன. நாடு, தன்னுரிமையற்று வெள்ளையரின்கீழ் விலங்கிட்டுக் கிடந்தபோழ்து விடுதலைவேட்கையால் வீறிட்டெழுந்து, காந்தியடிகள் ஆணை வழிநின்று, நவசக்திக் கிழமையிதழ் வழியாக நாட்டைத் தட்டியெழுப்பி, அடிகள் வகுத்த அறவழியில் ஈடுபடத் தூண்டி, விடுதலை பெறும்வரை கடனுற்று ஆற்றிய கடப்பாடு உலகம் அறிந்தவொன்று.

தொழிலாளர்கட்கும், ஏழை எளியவர்கட்கும் பேருதவியாக இருந்து செய்துபோந்த கைம்மாறுபேணாக் கடமை பெரிது! மிகப்பெரிது! மொழிக்குச் செய்த தொண்டு பிறர் எவரும் செய்யாத வொன்றும். அக்காலம், இற்றைக்கு முப்பான் யாண்டுகட்குமுன்னர், தமிழில் பேசுவது எழுதுவது என்றால் நாட்டுமக்களுக்கு ஓர் அருவருப்பு! அக்காலம் வேற்றுமொழி மயக்கில், சிறப்பாக ஆங்கில மொழி மோகத்தில் அடிமைப்பட்டு மயங்கிக்கிடந்த காலம்! தமிழில் சொற்பொழிவு ஆற்றவோ செய்தித்தாள்களில் எழுதவோ வாராது, ஒண்ணாது; இயலாதென அறிஞரெல்லாம் குறியறியாது மருட்சிகொண்டிருந்த காலம்! அதுகாலைத் தமிழில், அதினும் தனித்தமிழில் பேசலாம், எழுதலாம் என, மடிதற்று முன்னின்று விரிவுரையாற்றி, செய்தித்தாள்களில் எழுதி வழிவகுத்துக் காட்டிய மூதறிஞர் நம் கலியாணசுந்தரர் ஒருவரே. அரசியற் கருத்தை ஆங்கிலச் சொற்கட்கேற்ற தமிழ்ச்சொற்களிற் படைத்துச் சொற்பொழிவு மேடைகளில் கடன்மடை திறந்தெனப் பெய்த சொற்பெருங்கொண்டல் நம் திரு வி. க. அவர்களே.

சொற்பொழிவுத் திறன்

தமிழ்நாட்டில் தமிழர் வாழும் இடங்களில், கலைக்கழகங்களில், அறிஞர் பேரவைகளில், காங்கிரசுக்கூட்ட மேடைகளில், இசையரங்கவிழாக்களில், நாடகக்கொட்டில்களில், தமிழ்ச் சங்கங்களில் மேலேறித் தலைமைதாங்கி விரிவுரை நிகழ்த்தாத ஓர்

இடனுண்டோ? மூலைமுடுக்குகளிலெல்லாம் திரு வி. க. அவர்கள் தமிழ்முழக்கம் புகுந்து தமிழ் வீறுபெறச்செய்ததெனின் புகழ்ச்சியன்று, உண்மை! உண்மை! உண்மையே.

நூற்களின் மாண்பு

கிழமை இதழாகிய நவசக்தியில் அரசியற்கருத்துக்களை நறுந்தமிழ் உரைநடையில் வரைந்து நாடெல்லாம் பரப்பித் தமிழ்விருந்து புறந்தந்த அருந்திரு, நாடு முழுதும் நன்கறிந்தது. அதில் ஒவ்வொரு கிழமையும் எழுதிவந்த தலைப்புகள், சீரிய கூரிய தீஞ்சொல் வளங்கெழுமிய உரைநடைகளாகும். அஃதன்றி இவர்கள் வரைந்து தமிழணங்கிற்கு அணியாக அணிந்த உரையும் பாட்டுமான நூல்கள் ஐம்பதுக்கு மேற்பட்டன. அந்நூல்கள் ஒவ்வொன்றும் எக்காலத்தும் தமிழர் போற்றும் அரிய பேரறிவுமணிப் பேழைகளாய் அமைந்தன! இவையிற்றுள் தலைமைசான்ற மணிகளாகப் போற்றத்தக்கன 'முருகன் அல்லது அழகு,' 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,' 'பெண்ணின் பெருமை' முதலியன போன்றனவாகும். இவைகளன்றி உலகப் பொதுநூலாகிய திருக்குறளுக்கு அரியமுறையில் கட்டுரைபோல எழுதி, அறத்துப்பால் இல்லறவியற் பகுதிக்குப் புத்தம்புதிய முறையில் உரை வகுத்துக்காட்டிய நுண்மாண் நுழைபுலவன்மை தமிழுலகம் மறக்குந் தகையதன்று. இவர்கள் எழுதும் தமிழ்நடை தனி மாண்புடையது. நடையில் அழகு, சொல்லில் அழகு; கருத்தில் அழகு; யாவும் அழகு; அவர் பெயரும் அழகரே.

இவர் உரைநடை நூல்களைப் பயில்வார், தமிழ்ச்சுவை ஆரப் பருகி இன்புறுவதோடு சொன்னலங்கனிந்த இன்தமிழ்ப் புலவராக அமைதல் ஒருதலை. இவர்தம் நடை நூல்களில் சிறுசிறு சொற்கள், தனித்தமிழ்ச் செறிவு, நுட்பக் கருத்து; மொழிப் பற்று; நாட்டுப் பற்று, கலைப்பற்று, தொண்டுப் பற்று; கடவுட் பற்று; பொதுநெறிப் பற்றெல்லாம் ஒருங்கேயமைந்து, 'ஒருநாள் உறைந்திசினோர்க்கும் வழிநாள், தம்பதி மறக்கும் எம்பதி' என்பதொப்ப, ஒருநாள் இவர் நூலொன்றைப் பயின்றார்க்கும் வழிநாள் பிறவேறு நூல்களைப் படிக்க மனம் உந்தாது இவர்தம் நூல்களிலேயே உறைந்துகிடக்குமென்பது, இவர்தம் நூலைப் பயின்ற நடுவுநின்ற நன்னெஞ்சினோர் முடிபாகும்.

கைவல் கம்மியன் கையிற்கொண்ட தூரியமோ உளியோ தொட்ட இடனெல்லாம் கலையுருவமாய்க் கண்கவர் வனப்பின் ஓவியமாய் மிளிருதல்போல், திரு வி. க. அவர்களின் எழுது

கருவிநுனியில் அமைந்த எழுத்தோவியங்கள் தனியழகை, தமிழின் தனிப்பண்பழகைக்கொண்டு மிளிர்வனவாகும்.

வாழ்க்கைச் செம்மை

இத்தகைய புலவர் பெருமகனார், தன்னலந்துறந்த தனிப் பெருந்தகை, மண் பொன் பெண் என்னும் மூவகைப்பற்றும் முற்றுங்கடிந்த முனிவர், அந்தணாளர், ஐயகோ! மறைந்தார்! தமிழோவியம் தணந்தது! அரசியல் விளக்கம் அணைந்தது! அவரை இனிக்காணும் பேறற்றேம்.

இவர்தம் வாழ்க்கை அந்தண்மை வழியே சென்றது; காந்தியடிகள் அறநெறிவழியே வேரூன்றியது; நாடு முழுதும் காந்தீயவிதை வித்தி முளைத்து வளர்ந்து விளைவுமுற்றியது. அதனை வித்திய சொல்லேருழவரைக் காணேம்!

அறிவுக்குருடராய் வாழ்வோர் பல்லோர் பல்லாண்டு இன்புடன் வாழ, இருள்தீர்ந்த அறிவுக்கண்ணராய கலியாணசுந்தரர், உழைத்துழைத்து, எழுத்தோவியத்தைப் பார்த்துப்பார்த்துக் கண்ணொளி மழுங்கிச் சின்னாள் அலமந்தார். வன்றொண்டப் பெருந்தகையாராய சுந்தரர் தம் கண்ணொளி இழந்த காலத்தும் ஒற்றியூரனை 'நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே' என்று போற்றியதொப்ப, நம் சுந்தரரும் தம் கண்ணொளி குன்றியகாலையினும் தமிழ்த்தாயை மறந்தாரில்லை; நாட்டு நலனை அயர்த்தாரில்லை; விரிவுரை செய்யாது விலகினாரில்லை; புறக்கண் அவியினும் அகக்கண் ஒளிகான்று சுடர்ந்தது. கலைக்கூட்டமா ஆண்டு விரிவுரை, தமிழ்வளர்ச்சிக் கூட்டமா ஆங்கே சொற்பெருக்கு, அகக்கண் பெருக்கத் திறந்த காலத்தே மலர்ந்த நூலே 'அருகன் அருகே' என்ற அரிய பாநூல் முதலியன. உடல் மட்டும் முதுமையால் தளர்ந்தது; உள்ளந் தளர்வில்லை; ஊக்கங் குன்றவில்லை; என்றும் இளைஞராயிலங்கினார். 'தெள்ளூற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்' என்பதற்கொப்ப வாழ்ந்தார், வழிகாட்டினார்.

பெரும் பிரிவு

இவ்வாறு வழிகாட்டி மாண்புநெறியிற் படர்ந்த மாப்பெருந் தலைவரை—இராயப்பேட்டை முனிவரை—தமிழர் களஞ்சியத்தை—தொழிலாளர் தலைவரை—அந்தோ இழந்தோம்! இழந்தோம்! கண்ணிலியாகிய காலன் இரக்கங் காட்டினானில்லை. அந்தோ தமிழ்த்திருமகனாரைக் கவர்ந்து சென்றான்! அவனை வைகம் வம்மோ வளர்மொழிப்புலவீர்! தொழிலாளர்களே! 'நந்தா விளக்கனைய நாயகனே!' என்று

அன்று நாடெல்லாம் கதறிப் பதறி விம்மி ஏங்கிற்று! 'நானிலத்தோர் தந்தாய்' எனச் சாற்றிச்சாற்றி அழுதது பாட்டாளி மக்களின் கூட்டம்! 'அறத்தின் தாயே' எனக் குமுறிக் கண்ணீர் வடித்தது அறிஞருலகம். பிற்றைநாள் திரு. வி. க. வின் பொன்னுடலை எரியுண்டு செறித்தது, காங்கிரசுப் பணி செய்ய—தமிழ்த் தொண்டாற்ற—இயலை—இசையை—நாடகத்தை—கலையை நாடகமெல்லாம் பரப்ப—மேடைதோறும் சென்று சென்று போந்த திருவடிமலர்களைச் செந்தீ யழித்தது; நாட்டுக்கு அன்பையும் அறத்தையும் குழைத்துக்குழைத்து வடித்துத் தீட்டிய கடிமலர்க் கைகளைக் கதழெரி மண்டியுண்டது; ஐயகோ! எம் பெருந்தகை திரு. வி. க. எங்கே! எங்கே! யாண்டுற்றனர் என எம் நெஞ்சம் அலவுற் றேங்குகின்றது. ஆ! இவ்வுலகம் நிலைபேற்றது வீற்றிருந்தார் அன்று மேடையெலாம் சென்றிருந்தார், நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார்.

'உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே'

என்பதைக் கண்கூடாக் கண்டுவருகின்றேம்.

அரசினர் கடப்பாடு தவறல்

தமிழ்ப் பெரியாராகிய திரு. வி. க. அவர்களின் பெரும் பிறிது குறித்து மண்ணும் விண்ணும் மரனும் கல்லும் புல்லும் கனிந்துருகி அழுதரற்றின. ஆனால், இன்றமைந்துள்ள சென்னை மாநில அரசு, என்ன செய்தது? இறுதிக்கடன் நாட்கு ஏதேனும் ஏற்பாடு செய்ததா? இல்லை! இல்லை! தமிழ் ஒப்புரவுக் கடன்கொண்ட எளியார்க்கு அஃது என்னாற்றும்? அமைச்சுரிமை பூண்டனரில்லை, அரசாங்கச் சூழலில் அமர்ந்தனரில்லை; எங்கோ ஓர் துச்சிலில்—எளியார் சார்பில்—தொழிலாளர் உலகில்—தொங்கிநின்ற ஓர் தொண்டர்க்குக் கடமை புரியுமா? புரிந்தால் அதற்குப் பெருமையுண்டா? இல்லையன்றோ? மறைமலையடிகளார்க்குத் தன் உரிமைக்கடன் ஒப்புரவை நிகழ்த்த மறந்திழந்த மாநில அரசு, நிறைமலை திரு. வி. க. அவர்கட்கேனும் ஆற்றித் தம் அறுவாய்க்குறையை நிரப்புமெனக் கருதினேம். அம்மதி செய்ம்மதி என ஏவுவார் இன்மையின் இழக்கலாயிற்று. எனவே, இன்றமைந்துள்ள அரசு, தமிழ்நாட்டுக்கென அமைந்த தனித் தமிழரசெனச் சாற்றற்கில்லை கூட்டரசாதலின் வேட்டதே வேட்டதாக நின்றதில் வியப்பில்லை. அது தமிழரசாகவே அமையின், தமிழர் நலங்கருதிய அரசாக

மிளிரும். இன்றேல் அது தன் கடமையில் தள்ளாது தவறும். அதற்கு இச்செயலே சான்று.

தமிழகத்தில் தமிழரசு நிலைத்த பண்டைநாளில் தமிழறிந்த புலவர்க்கு மலையிலேறிக்கண்ட நாடு கொடுத்தது மகிழ்ந்தான் ஓர் மன்னன்; வாள்கொண்ட கையில் வளாசாமரை கொண்டு வீசினன் மற்றோர் வேந்தன்; தமிழ்வாணர்க்குத் தன தலை கொடுத்துப் பொன் பெற்றுச்செல்ல வேண்டினான் மற்றோர் காவலன்; 'புலவர் பாடாது வரைக என் நிலவரை' எனச் சூளுரைகூறி மதித்தான் வேறோர் அரசன்.

இத்தகை வேந்தர் இன்றிருந்தால் எம் திரு. வி க வுக்கு எத்தகைப் பயன்செய்வர். தம கடமையை மறவார். ஒப்புர வாற்றி உயர்வுறுவர். ஆனால் இச் செயற்பாட்டைக் கடுகளவும் கருதாத பேருளளப் பெற்றியர் நம திரு வி க. அவர் ஒருகால் தம்மைப்பற்றிக் கூறிய பொன்னுரை ஈண்டுக் கருதற்பாலது:

"வாழ்க்கையில் வெற்றியும் பேசப்படுகிறது, தோலவியும் பேசப்படுகிறது வெற்றிவாழ்க்கை எது? தோலவிவாழ்க்கை எது? பதவி, பொருள் முதலியவற்றில் படிப்படியே இவர்ந்தோர் வாழ்க்கை வெற்றியுடையதென்றும், மற்றவர் வாழ்க்கை தோலவியுடையதென்றும பொதுவாகக் கருதப்படுகின்றன வாழ்க்கையின் வெற்றி பதவி பொருள் முதலியவற்றில விளைவது உண்மையாயின என்னுடைய வாழ்க்கை முழுத் தோலவியுடையதென்று சொல வேன ... எவருடைய வாழ்க்கையில அறிவு படிப்படியே எவ்வுயிரும பொதுவென்னும தெளிவு தோன்றித் தம உயிரேபோல பிற வுயிருமெனனும உணர்வுபொங்கித் தொண்டுசெய்யும அன்புச் செல்வமாகிய அந்தணமை அமைகிறதோ, அவர் வாழ்க்கை வெற்றி யுடையதென்றும் மற்றவர் வாழ்க்கை தோலவியுடையதென்றும எனது கலவி கேளவி ஆராயச்சி அனுபவம முதலியன எனக்கு உணர்த்துகின்றன."

எனக் கூறும் அந்தமிழின்பத்தரசாள அறநெறிச் செல்வர்க்கு இது சிறப்பன்று. அவர்தம ஆனமா இதனை விரும்பாது, வெறுக்கும ஆனால அரசோ பிறரோ இத்தகைப் பெரியார் கட்பாட்டில் தலைப்பெய்து தம்மை உயர்த்திக்கொள்ள முன் வரல் வேண்டும் இவவாறான முதற்பெருங் கடமைகளில் தவறலாகாது தவறின், அறநெறியாவும தவறும.

முழுவுருச் சிறப்பு

அன்பு கனிந்து மலர்ந்த திருமுகம்; அருளொழுகு கண்கள்; செந்தமிழ்மணங் கமழும திருவாய்; தமிழென இன்பந்தரும் முழுத்தோற்றம். வெள்ளிய ஆடையணிந்த திருவரை, இவை திரு. வி. க. அவர்களின் முழு வடிவம்!

அவ்வடிவு எங்கோ மறைந்தது, யாண்டுண்டுகொல்லோ! அவர்களைக் காணும்போதெல்லாம்,

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு மீதிழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்"

என, சேக்கிழார்பெருமான் அப்பரடிகளை எழுதிக்காட்டிய ஓவியம் எம் சிந்தையில் தோன்றாமல் இரா.

பிறவாப் பிறப்பு இன்ப நிலை

இவ்வண்ணராகிய அண்ணல், அருந்தண்மையாளர் அந்தோ மறைந்தார்; அவர்தம் திருவுரு இனி நம் ஊனக்கண்முன் ஒருகாலும் வாராது, யாமும் காண்கின்றிலோம், ஆனால் அவர்தம் புகழுடலாகிய நூல்களை நமக்கு எச்சமாக நிறுவிப்போயுள்ளனர்; கருத்தோவியமான எழுத்துடல்பெற்று நம்மோடிரண்டறக் கலந்துள்ளனர்; அவ்வுருவோ டொன்றுபட்டு இயைந்து இன்புறுவோமாக. இனி அவர்க்குப் பிறப்பு இறப்பு இல்லை யென்பதுறுதி. ஒருகால் பிறப்புக்கூடுவதாயின் பொருநைத்துறையொடு குமரித்துறைவரை எம் கன்னிச் செந்தமிழ் நாட்டிலேயே பிறப்பர். பிறந்தாலும் சேய்கள் பலகாணும் தாய்மைப்பேறுகிய பெண்மை உருக்கொண்டு பிறப்பர். ஏனெனின் அவர்கள் எங்குப் பேசினும், எழுதினும் பெண்மையைப் பாராட்டிப் பேசாமல் எழுதாமல் இருந்ததில்லை. தமக்கும் உலகப்பேரறிஞர்கள் பலர்க்கும் பெண்மை இயல்பே மிக்கிருப்பதாகவும் கூறிக்கூறி மகிழ்வதுண்டு. எனவே, அவர் இனிப் பிறப்பின் பெண்ணிற் பெருந்தக்க பிறவியாகவே பிறப்பர். அவாவாயிலாக நம் தமிழ்மொழி இதுகாலை வளர்ந்த பேற்றினும் வரும் பெண்மைப் பிறப்பில் தண்ணார் தமிழாய்—அன்புகலந்த தமிழ் தழீஇய தீந்தமிழாய் ஒளிரும் என்னும் பேராசை துளிர்வளரும் தன்மையேம்.

வீடுபேறு வேண்டி இரங்கல்

தொழிலாளர் தலைவர் - புலவர் பெருமகனார் - எழுத்துலகப் பேரறிஞர் - சமரச சன்மார்க்க ஞானி - சைவவான்மணி - காந்தீயக் காளாமணி விளக்கம் - அந்தணர் - அருளாளர் - தெருளாளர் திரு. வி. கலியாணசுந்தரனாரின் நல்லுயிர் இறைசிவன் திருத்தாண்மலரின் இன்பத்தேனுண்டு என்றும் வாழ்க.

—ஆசிரியர்.

வாழ்க்கை வரலாறு

[செல்லூர்க்கிழார், திரு செ. ரெ இராமசாமிபிள்ளை]

திரு. வி க உரிமை நாடு

'சோழவளநாடு சோறுடைதது' என, ஔவையாரால் பாராட்டப்பெற்றது சோழநாடு. அந்நாட்டின்கண் திருவாரூர் மாண்புமிக்க பழமபதி ; அது பாடல்சால் சிறப்புடையது ; ஆங்கே புற்றிடங்கொண்டாராகிய இறை சிவபெருமான் கோயில் பழங்கால வரலாறு பெற்றது. அவவூரில வேளாண்குடி விளக்கம பெறறது. அக்குலத தோன்றல்களுள் ஒருவா விருத்தாசல முதலியா ரென்பவா அவா பண்பின தலைப்பிரியாப் பாஙகினர்; கற்றல் கேட்டல அமைநத கல்வி கேளவியாளா. அவா விருந்து புறநதரூஉம பெருநதண் வாழ்கையை மேற்கொண்டனர். அனனாககு முதல இல்லறத்துணைவியாக வாய்த்தவர் பச்சை யமமாளெனப பெயரிய நங்கையாா. அவர்பால் விருத்தாசல னாருககு ஆண மகாா மூவரும, பெண்மகள் ஒருவரும தோன்றி னா. அபபால் அவ்வம்மையார், கொடு வெஞசுரததால் உலக வாழ்வைத துறநதனர்.

பின்னர் இரண்டாம் இல்லறக்கிழத்தியாராக மரக்காணம் வேங்கடாசல முதலியாரின் அருமைப புதல்வியாா தன்னலமற்ற சின்னம்மையாரை மணநது இற்கிழமைபூண்டொழுகினர். இவர் சென்னை இராயபபேடடையில கூலவாணிகம் நிகழ்த்திவந்தனர். அதுகாலை சினனமமாள் மணிவயிற்றில் மூன்று பெண்மககளும் ஓர் ஆண்மகவும தோன்றினா. அபபோது சேக்கிழார் பெருமான் தோன்றிய குன்றத்தூரை யடுதத செம்பரம்பாக்கத்தில் ஏரி தோண்டுதல், செப்பனிடல வேலை நிகழ்ந்தது. அவ் வேலையைக் குததகைக்கு விட்டனா. அதனை விருத்தாசலனார் 'குததகை' யெடுத்தார் முனனரே நடததிவநத கூலவாணிகத் தைதத தம் முதல மனைவியார் மகனார் சதாசிவ முதலியாரிடம் ஒபபடைத்தார். ஏரி வேலை தொடர்ந்து பன்னெடுநாள் நடை பெற்று வநதது. அவ்வலுவல் பலலாணடுகள நடந்தமையால் சுற்றுபபுற நாட்டுமக்கள பலர் நம் விருத்தாசலனார்க்குக் கெழுதகை நட்பினராயினா. அச் சுற்றுப்புறச் சிற்றூர்களில் துள்ளம் என்னும் ஊரும் ஒன்று. அது சைதாப்பேட்டைத் தாலூகாவில் நூம்பலுக்கும் செட்டியாவரத்துக்கும் இடையி லுள்ளது. துள்ளத்திலுள்ள பல பெரியோர் இவர்பாற்

மறைந்த தமிழ்ப்பெரியார், தமிழகத்தின் தந்தை

திரு வி கலியாணசுந்தர முதலியார

5—1—1952 அனறு கோகலே மணடபததில டாகடா S தருமாமபாள். புலவா மயிலை. சிவமுத்து அவாகட்கு நிகழ்ந்த மணிவிழாவில திரு. வி க தலைமைதாஙகியபோது எடுதத நிழலோவியம



திரு வி க அவாகள தலைமையில 15—9—1952-ல ஸ்ரீ நடராஜா கலவிச கழகததின சாபில மறைமலையடிகளாா இரணடாம் ஆணடு நினைவு நாள விழா நடைபெறறபோது எடுககபபடட நிழலோவியம

நாடகக் கழகத்தின் சார்பில் 1—2—1953-ல் நடைபெற்ற திரு. ப. சம்பந்த முதலியார் அவர்களின்
80-ம் ஆண்டு நிறைவுவிழாவில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், திரு. இராசகோபாலாச
சாரியார், திரு. ப. சம்பந்த முதலியார் ஆகியோர் மகிழ்ச்சியுடன் அளவளாவும் காட்சி.

திரு வி. கலியாண சுந்தர முதலியார்

தோற்றம் : 26—8—1883

மறைவு : 17—9—1953

பேரன்பினராய் 'இனி நீங்கள் பட்டினம் செல்லவேண்டா; இங்கேயே தங்கி வணிகம் நடத்துங்கள்' என வேண்டினர். வேண்டுகோட்கிசைந்த விருத்தாசலனார், துள்ளத்தில் தங்கி வணிகஞ் செய்யலானார்.

பிறப்பு

தாம் இராயப்பேட்டையில் விட்டுவந்த தம் இரண்டாம் மனைவியாரையும் குழந்தைகளையும் துள்ளத்துக்கு அழைத்து வந்தார். ஆங்கே, பனையோலையால் வேய்ந்த குடிலொன்றமைத்தார் அக்குடிலில் இருந்துவரலானார். அதுகாலை ஓர் ஆண் மகனும், பின்னர் சுபானு ஆண்டு ஆவணித் திங்கள் ௧௧ (26-8-1883) ஆம் நாள், ஓர் ஆண்மகவும் சேய இளம்பரிதியெனச் சிவனருளால் தோன்றினார். பிறபிறந்த அம்மகவே, நாடெல்லாம் போற்றவரு நம திரு வி. கலியாணசுந்தரனார்

பள்ளி வாழ்க்கை

இவர் வாழையிளந் குருத்தெனை வளர்ந்து வரலானர். பின்னர் பள்ளிப்பருவம் எய்திற்று இவர் தம தந்தையார் விருத்தாசல முதலியாரே ஆசிரியராக இருந்து இவர்க்கும் இவர் தமையனார் உலகநாதருக்கும் கல்வி கற்பித்தனர் அப்பால் 1890-ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்து சேர்ந்தனர். 1891-ல் இவ்விருவர்களையும் பள்ளியில் சேர்த்தனர், முறையாகக் கல்வி கற்று வந்தனர்.

பின் 1894-ல் வெஸ்லிக் கல்லூரியில் இவர்களைச் சேர்க்கப் பெற்று இருவரும் கல்வி பயின்று வரலாயினர். அப்பால் குடும்ப நிலையினால் நான்காண்டுகள் கல்விகற்றற்கு வாய்ப்பின்றி இடையறவுபட்டது. அப்பால் 1898 ஆம் ஆண்டு வெஸ்லிக் கல்லூரியில் மீண்டும் சேர்ந்து கற்கலாயினர். எவ்வித்த தடையுமின்றி யாற்றொழுக்குப்போல் இவர் தம படிப்புநிலை உயர்ந்து சென்றது. பள்ளியில் எல்லாத் துறைகளினும் முதன்மைவாய்ந்து பரிசு பெறும் திறனுடை மாணவராக இலங்கினார். இக்காலத்து இவர் தம திறனறிந்து வியந்த பள்ளிப்பொறுப்பாளர் இவருக்குப் பள்ளிச் சம்பளமில்லாது படிக்க வாய்ப்பளித்தனர். ஞாயிறு வகுப்புக்கள்தோறும் தவறாது சென்று படித்தார். அதனால் கிறித்துமதக் குருமார்களின் தொடர்பு இவருக்கு மிகுதியாயிற்று. ஆறும்பாரம் படித்துக்கொண்டிருந்தபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் வெஸ்லியில் தமிழாசிரியராக இருந்து தொண்டாற்றினர். அவருடன் திரு. வி. க வுக்கு மிக்குத் தொடர்பு உண்டாகியது. அதனால் பள்ளித்தேர்வுப் பாடங்கள் கற்பதைவிடத் தமிழ்நூற்களைக் கற்றுத் தேர்வதில்

ஆர்வம்பெருகிப் பள்ளிப்படிப்பிற் சிறிது ஊக்கங் குறைவதா யிற்று. இதற்கிடையில் கதிரைவேற்பிள்ளைக்கும் இராமலிங்க அடிகள் கூட்டத்தாருக்கும் பெருவழக்கொன்று நிகழ்ந்தது அதைச்சார்ந்த பிறிதோர் வழக்கில் திரு. வி. க. சான்று பகரச் சென்றார் அவ்வழக்கின் வெற்றி தோல்விமுறைகளைக் கண்டறி தற்கு விழைந்தார். அதற்காக அடிக்கடி வெளியிற் போயவர நேர்ந்தமையால் படிப்பில் கருத்துப் பதியாதவாறு ஓராண்டு கழிவதாயிற்று. தமிழ்ப்பேராசிரியர் சிலநாள் ஓய்வெடுத்திருந் தனர் அந் நாட்களில் ஆசிரியர் விரித்துரைத்த பாக்களின் அரும்பொருட் கருத்துரைகள் திரு. வி. க. வின் உள்ளத் தடத்தில் நிலைப்பவாயின. பின்னர்ப் பள்ளிப்படிப்பில் வெறுப் புத் தோன்றிற்று, பள்ளியைவிட்டகன்றார். விட்ட சில திங்கட் குள் சுந்தரர் தந்தையார் விண்ணுலகெய்தினர். அப்போது இராசா முதலியார் தூண்டுதலால் 'புக்கீபிங்' பயின்று தேர்வில் தேறினர். நாளடைவில் பன்னூற்களும் கற்றுத்துறைபோய்க் கல்விக்கடலாக நிலவலானார்.

ஊழியம்

1906-ல் ஸ்பென்சர் கம்பெனியில் சேர்ந்து வேலை பார்த் தனர் அங்கு இரண்டாண்டுகளே இருந்தனர் பின்னர் விலக லானார். 1908-ல் சென்னைக்கு வந்து சேர்ந்து கடற்கரையில் பேசிய விபினசந்திரபாலரின் அரிய சொற்பொழிவு, திரு. வி. க. வை ஈர்த்தது அது நாட்டுவெறியை உண்டாக்கிற்று. நாளிதழ்களில்வந்த அவர் சொற்பொழிவை ஸ்பென்சர் தொழி லாளிகளிடம் சென்று ஓரிடத்திற் கூட்டங்கூட்டிப் படித்துக் காண்பித்தார். ஸ்பென்சரைவிட்டு விலகியபின், திரு வி. உலகநாதரும், சிவசங்கர முதலியாரும் கூட்டாக வைத்து நடத்தி வந்த 'உமாபதி குருபிரகாசம் பிரஸ்' என்னும் அச்சகத்தில் திரு. வி. க. பெரியபுராணக் குறிப்புரையினை உரைநடையுடன் எழுதித் திங்கள்தோறும் தனித்தனி இதழாக வெளியிட்டார். பின்னர்த் திருமந்திரமும் வெளிவந்தது பின் அச்சகம் ஊதியக் குறைவினால் நின்றது, வெளியீடும் நிறகலாயிற்று

அப்பால் சுந்தரனார் ஆயிரம் விளக்கிலுள்ள வெஸ்லியன் கல்லூரியில் முதற்பார ஆசிரியராக அமர்ந்து தொண்டாற்றினார். அதில் ஆறாண்டுகள் அலுவல் பார்த்தார். பிறகு இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழ்ப்பேராசிரியராக அமர்ந்து ஒன்றரையாண்டுகள் நற்பணி புரிந்தார். 1917-ல் நிகழ்ந்த தன்னுரிமையாட்சிக் கிளர்ச்சி காரணமாக அன்னி பெசண்டு, அருண்டேல், வாடியா ஆகிய மூவரும் காப்புக்

கைதிகளாகக் காவலில் வைக்கப்பெற்றபோதுதான் வெஸ்லி ஆசிரியத் தொழிலைவிட்டு விலகினார்.

இல்லறக்கிழமை

பெண்ணுலகிற்கு நம திரு வி க ஆற்றிய தொண்டு மிகபபல. பெண்ணின் பெருமையென்ற தனி நூல, இவரால் எழுதபபெற்றது; இது அரிய கருததுச செறிவுடைய கருவூலமாகும் இவர் தம பேச்சுவனமையால் பெணணுலகு உயாச்சி பெறறு நின்று தலைநிமிாநது நிறகினறது. இததொணடு தமிழ்நாட்டில் யாரும் காணுத - ஆற்றுத ஓா அரிய பெரிய செயல. 1912-ல கமலாம்பிகை எனனும் அமமையாரைத தம வாழ்க்கைத்துணையாக மணநதார். ஆறுண்டுகள இவா தம இலலறம் நனகு நிகழ்நதது இககாலததில ஆண், பெண் மகவு இரண்டு தோனறி மறைநதன. 1918-ல கமலாமபிகை அமமையாரும தம ஆருயிாததுணைவரை விட்டுபபிரிநது மேலுலகெய்தினார். இவ்வளவோடு திரு வி. க வின இல்லறவாழவு முறறுறறது பினனா நணபாகளும உறவினரும மறுமணம் செய்துகொளள வேணடுதல் விடுததனர். அதற்கு எம் இதயததில ஒருவரே இடமபெறற்குரியார் எனக் கூறி மறுத்துவிட்டனா.

நாடடுத்தொண்டு

பினனா 1917-ஆம் ஆணடு திசம்பர்த் திங்களில் 'தேசபக்தன்' என்னும் கிழமையிதழ் ஆசிரியராக இருந்து இரண்டரையாண்டுகள அரும்பெருந தொணடாற்றினா. 'தமிழ தெரியாது, தமிழில சொற்பொழிவு ஆறற இயலாது' எனறு கூறிககொண்டிருநத தலைவாகளை யெலலாம தமிழில பேசும ஆறறலை உணடாக்கினர்; பலலாறறானும் தமிழ்மொழியை ஆக்கமபெற வளாத்தனர். அபபால 'தேசபகதன் லிமிடெட்' காரியதரிசிககும இவருக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டினுல் தேசபக்தனை விட்டு வெளியேறினா.

அதனபின், 22-10-1920-ல 'நவசக்தி' என்னும் கிழமை இதழ் துவங்கி வெளிபபோந்தது. 1930-ல் காந்தியடிகளால் உபபுச சததியாககிரகப போர் துவங்கியபோது காஙகிரஸையும் காநதியடிகள கொள்கைகளையும் தன்னகததே திறம்படத தீட்டி வெளிவநதமைககாக அரசினரால நவசக்திக்கு ஈடுகாணம் கேட்கபபட்டது அதனுல ஆறுதிங்கள் இடையிலே நின்று மீண்டும வெளிவநதுலாவிற்று. சிறப்பாக நவசக்தி இதழ் தமிழ் வளாசசிககுச் செய்ததொணடு மிகப பெரிது. ஒபபளவின்றி உயர்நதது. இவவாறு நவசக்தி இருபான் ஆண்டுக்காலம்

தமிழ்மாநிலம் முழுதும் மலர்ந்து கமழ்ந்தது. அண்மையில் நிகழ்ந்த உலகப் போர்க்காலத்தில் அதனை நிறுத்தினார்.

விபினசந்திர பேசினால் அரசியல்நெறியில் ஈடுபட்டுக் காங்கிரசுத் 'தொண்டராகத்' தலைவராக இலங்கினாராயினும் தாய் மொழியாம் தமிழ்மொழித்தொண்டே தலைசிறந்ததாகக் கொண்டார்; பேச்சு, எழுத்து யாவும் தனித்தமிழாகவே இருக்கும் இக்காரணத்தால் நம் முதலியாருக்குச் சிறைவாழ்வு கிட்டாது அகன்றது நெல்லை, திருச்சி, வடாற்காடு, தென்னாற்காடு, காஞ்சி முதலிய இடங்களில் நிகழ்ந்த மாநாடுகளில் தலைமைதாங்கிச் சிறப்புற நடத்தினார். அக்காலத்தில் ஈ வெ ரா, டாக்டர் வரதராசுலு நாயுடு, திரு வி. க மூவரும் ஒன்று கூடாத கூட்டமே இல்லையெனலாம்படி அரசியல்மேடைகளில் இம் மூவரும் ஒன்றுபட்டுச் சொற்பொழிவு ஆற்றினார்கள் இன்னும் இன்னன்போன்ற அரிய பணிகள் பலபல ஆற்றிவந்தனர்.

தொழிலாளர் உலகிற்குச் செய்த தொண்டுகள் அளவற்றன. இந்தியாவிலேயே முதன்முதல் ஓர் தொழிலாளர் சங்கம் அமைந்ததென்றால், அது சென்னைத் தொழிலாளர்சங்கம் ஒன்றேயாகும் இச்சங்கம் 1918-ல் அமைக்கப்பெற்றது. இதை அமைத்த தலைவர்கள் ஐவரில் நம் திரு வி க வும் ஒருவராவர். இதில் தொழிலாளர் உலகிற்குச் செய்த கடப்பாடு மிகப் பெருமைக்குரியதாகும்.

சமயப்பணி

திரு வி க சமயப்பற்று, சைவநெறிப் பற்றுமிக்க குடும்பத்தில் தோன்றியவர், ஆகலான், சைவ நன்னெறியிற்பட்டாங்கு சைவசமயத்தில் பொதுநெறி கண்டு வாழ்ந்தார். சைவசமயத்தில் ஏனைய சமயநெறிக் கருத்துக்கள் செறிந்திருப்பதை உலகினர்க்கு எடுத்து விளக்கினார் அதனால், 'சைவத்தின் சமரசம்' என்னும் நூல் மலர்ந்தது சைவசமயக்கொள்கையில் வேரூன்றி நின்றாலும் வேற்றுச் சமயங்களில் காழ்ப்புக்கொள்ளாது ஒத்த கருத்தினவே யென்றுகொண்டு மகிழ்ந்தார்

பிரிவு

திரு. வி. க. பளிங்கனைய மாசு மறுவற்ற உள்ளப்பாங்கினராக; எளிய வாழ்வும் எளிய உடையுங்கொண்ட தூய முனிவராக இலங்கினார். இத்தகையாருக்குச் சிலகாலமாக உடலூரங் குன்றியே வந்தது தம் பிரிவுநாளுக்கு இரண்டுநாள் முன்பே உணர்வற்றநிலையில் இருந்தார். பின்னர் 17-9-53 ஆம் நாள் இரவு 7-45 மணிக்கு இராயப்பேட்டை, கணபதி முதலி தெருவி

லுள்ள தம் இல்லத்தில் திரு வி. க.வின் நல்லுயிர் இறையடிப் பேறுற்றது.

மக்கள் காட்டிய அன்பு

மறைந்த பெரியார்க்குத் தம் இறுதி அன்பைச் செலுத்த இரவுமுதல் பல தலைவர்களும் பெரியவர்களும் அவர் இல்லத்திற்கு வந்தவண்ணமாகவே இருந்தனர். டாக்டர் திரு மு. வரதராசனார், திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. பக்கிரிசாமி பிள்ளை முதலியோர் வந்து, திரு வி. க. அவர்கட்குத் தம் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர். இரவு முழுதும் திரு வி. க. அவர்களின் நல்லுயிர் அமைதியுறத் தேவார திருவாசகங்கள் ஓதியவண்ணமாகப் பலர் சூழ்ந்திருந்தனர். மறுநாட்காலையில் சென்னை மாநில முதலமைச்சர் திரு ச. இராசகோபாலாச்சாரியார், சட்ட சபைத் தலைவர் திரு ஜே. சிவசண்முகம் பிள்ளை, நகராண்மைக் கழகத் தலைவர் திரு டி. செங்கல்வராயன், உதவித்தலைவர், திருவாட்டியார் சரசுவதி பாண்டுரங்கம், டாக்டர் திரு பி. வரதராசுலு நாயுடு, சென்னை அரசியற்பொருளாதார ஆலோசகர் டாக்டர் திரு பி. நடராசன், போலீஸ் கமிஷனர் திரு. பார்த்தசாரதி ஐயங்கார், திரு ம. பொ. சிவஞான கிராமணியார், திரு அ. மு. பரமசிவானந்தம், திரு அ. ச. ஞானசம்பந்தம், பேராசிரியர் திரு சுவாமிநாதன், நாடகக் கலைஞர் திரு. டி. கே. சண்முகம் முதலியோர் கலியாணசுந்தரர்க்குத் தம் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

எல்லாத் துறைகளிலும் பொதுத்தொண்டாற்றிய தமிழகத் தலைவர் பிரிவினையறிந்த பொதுமக்கள் யாவரும் மறுநாட் காலைமுதல் பகலெல்லாம் பெருந்திரளாக வந்துகொண்டேயிருந்தனர். பலர் கருப்புடையணிந்து வந்திருந்தனர். ஆடவர், மகளிர் யாவரும் திரு வி. க வின் உடலுக்குத் தம் அன்பைக் காட்டி வணக்கஞ் செலுத்திப் புன்கண் உற்றனர்.

பிற்பகல் ஒரு மணிக்கு திரு. வி. க வின் பொன்னுடலைக் கருப்புத்துணி போர்த்திய ஓர் பொறிவண்டியில் (கார்) இருத்திப் பெரம்பூர் பாரக்கிலுள்ள சென்னைத் தொழிலாளர் கழகக் கட்டிடத்துக்குக் கொண்டுபோகப் பெற்றது. ஆங்கே மக்கள் திரண்டுவந்து வணக்கஞ் செய்தனர்.

வழிநடைச் செலவு

பின்னர் திரு. வி. க வின் திருவுடல் ஊர்வலம் பிற்பகல் மூன்று மணிக்குத் துவங்கியது. மக்கட்கூட்டம் வெள்ளம்

போல பின்தொடர்ந்து வந்தது. பெரம்பூர் பாரக்ஸ் ரோடிலிருந்து புறப்பட்டு வேப்பேரி வழியாக வந்து சிந்தாதிரிப்பேட்டை லெவல்கிராசிங் வழியாகப்போய் நேப்பியர் பூங்காவை யடைந்தபோது, காற்றும் மழையும் கலந்தடித்ததால் ஊர்வலம் சிறிது தடைப்பட்டது. எனினும் பின் மவுண்ட்ரோடு, ஜெனரல் பீட்டர்ஸ் ரோடு வழியாக வந்து மௌபரீஸ் ரோடிலுள்ள பாலசுப்பிரமணிய பக்தசன சபையை அடைந்தது. இது திரு. வி. க. அவர்களால் ஏற்படுத்தப் பெற்றது. அங்குச் சிறிது நேரம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பெற்றது. அப்போது திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை, முருகப்பெருமானுக்கு ஆரத்திசெய்த கற்பூரத்தை யெடுத்துவந்து உடலத்துக்குக் முன் காட்டி, சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் திரு சா. நடேசன் அளித்த கங்கைநீரைத் தெளித்ததுடன், திருவட்டீசுவரர் திருக்கோவிலி லிருந்துவந்த திருநீற்றை நெற்றியில் பூசி, அவையார் சார்பில் மலர்மாலையும் சாத்தினர். இங்குத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குழாம் சார்பிலும் மாலையணிவிக்கப்பட்டது.

மனம்மாழ்கித் தொடர்ந்த மக்கட்கூட்டம்

திரு வி. க. மறைவைத் தொலைபேசி வழியாக அறிந்து பெரியார் ஈ. வே. ரா. ஈரோட்டிலிருந்து பொறிவண்டியில் விரைந்து ஊர்ந்துபோந்து ஊர்வலத்திற் கலந்துகொண்டனர். ஊர்வலக் கூட்டம் சாரைசாரையாக ஒருகல்தொலை நீளமிருந்தது. குறிப்பிடத்தக்கது ஊர்வலத்தில் தேசியக்கொடிகள், சென்னைத் தொழிலாளர் கழகக் கொடிகள், திராவிடக் கழகம், முன்னேற்றக் கழகக் கொடிகள், கம்யூனிஸ்டுக் கட்சிக் கொடிகள் முதலியன, பல தொண்டர்களினால் தாங்கப்பெற்று திரு. வி. க. வின் திருவுடல் தாங்கிச்செல்லும் பொறிவண்டி இருமருங்கினும் பரந்து சென்றன. மௌனமாகச் சென்ற ஊர்வலம் மாலை 6-45 மணிக்கு மயிலை நன்காடு அடைந்தது. அதுகாலை அங்கு முன்னதாகவே பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடிவிட்டமையாலும், நடைவழி மிகக் குறுகியதாகவும் மிகச்சீர்கெட்டுப் போயிருந்ததாலும் சிறிது சிரமத்தோடு கூட்டத்தை விலக்கினர். பின் விறகடுக்கின்மீது திரு வி. க. வின் பொன்னுடலை வைக்கப்பெற்றது. அங்குக் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான பெண்மணிகளும் உறவினரும் கடைசிக் காண்டலுக்கு விடுக்கப்பெற்றனர். அவ்வேளை திருவாசகத்திலுள்ள சிவபுராணம் ஓதினர், உடலத்துக்குக் கங்கைநீர் தெளித்தனர்; திருநீறிட்டனர்; மலர்மாலை சாத்தினர், கற்பூரம் சந்தனக்கட்டை முதலியன வைக்கப்பட்டன.

அப்பால் இறுதிச் சடங்குகள் எதுவுமின்றித் தம் உடலை எரியூட்டுதல் வேண்டுமென முன்னரே திரு. வி. க. அவர்கள் வற்புறுத்திக் கூறியதாக டாக்டர் மு. வரதராசனார் தெரிவித்தார். அப்போது திரு. வி. க. உடலுக்கு மக்கள் எண்ணிறந்த மலர்மாலை சூட்டிக் கண்ணீர் தெளித்து வணங்கினர். தமிழ் எழுத்தாளர் சங்கம், நாடகக் கழகம், நக்கீரர் கழகம், பெத்து நாயக்கன் பேட்டைத் தாய்மார் கழகம், புரசை கல்விச்சங்கம், சென்னை சிவனடியார் திருக்கூட்டம் முதலியவைகளின் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

உடற்கு எரியூட்டல்

பின்பு திரு. வி. க. அவர்களின் பெரிய தந்தையார் மகனாகிய சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. பாலசுப்பிரமணியத்தாலும் மற்றவர்களாலும் உடலுக்குத் தீ மூட்டப்பட்டது. அப்போது திருவாசகப் பாடல்கள் ஓதப்பட்டன. 'திரு. வி. க. வாழ்க. திரு. வி. க. புகழ் ஓங்குக' என்னும் பேரொலியை அங்குக் குழுமியிருந்த மக்கள் வானளாவ முழக்கினார்கள். இரவு ௭ மணிக்குப் பெருந்தகை திரு. வி. க. வின் பொன்னுடலை எரி மண்டி அழிக்கலுற்றது. குழுமிய மக்கள் யாவரும் பல பிரிவாகச் சென்று நீரிடை மூழ்கி நினைப்பொழிந்தவர்களாய்த் தத்தம் இல்லம் நோக்கி ஏகினர்.

எற்புடல் கடலொடு கலத்தல்

பிற்றைநாட் பகலில் கொடுமைமிக்க ஞாயிற்றின் கதிர்கள்; அவ் வெய்யிலில் ஓர் சிறுகூட்டம்; தமிழகப் பெரியார் எற்புடம்பை எடுக்க நடந்துசென்றது; ஒரு சிறு மட்கலம்; அதனுள் தெங்கம்பாளைப் பூங்கதிர்கள் சில. இவைகளுடன் 'எழில்' என்னும் இதழ் நடத்திய தட்சிணாமூர்த்தி சென்று, திரு. வி. க. வின் சில துண்டும் துணுக்குமான எற்புடம்பை யெடுத்து அக்கலத்திட்டு மெல்லிய துணிகொடு மூடிக் கடலை யண்மினர். கலத்தொடு கடலுண் மூழ்கி யெழுந்தார். கடல் போற் பரந்தபேரறிவும் அன்புங்கொண்டு வாழ்ந்த திரு. வி. க. வின் எற்புச் சட்டகம், கடலிடைப் பொற்பொடு கலந்து ஒன்றாகிக் கரந்து, பரந்தது.

வாழ்க திரு. வி. க; வளர்க அவர் புகழ்!

'மீட்டும் வருவார்'

[திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ.]

திரு. வி. க. மறைந்துவிட்டார். 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை' என்னும் பெருமையுடையதுதான் இவ்வுலகம். தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களைக் கொடுந்தொழிலாளனாகிய இயமன் கொன்றனன் குவிப்ப அழல்வாய்ச் சுடலை தின்றுகொண்டுதான் இருக்கிறது. ஆனால் உலகம் அதற்காக நிற்பதுமில்லை, பெருவருத்தம் அடைவதுமில்லை. எனினும், ஒவ்வொரு சமயங்களில் இந்நிலை மாறிவிடுகிறது. யாரோ ஒருவர் இறந்துவிட்டதற்காக உலகம் நின்றுவிடுகிறது; பெருவருத்தம் அடைகிறது. அத்தகைய ஒருநிலை தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. திரு. வி. க. வின் மறைவால் தமிழ்நாடு நீக்கலாகாப் பெருந்துயரில் ஆழ்ந்துவிட்டது. அவருடைய சுற்றத்தாரும் குடும்பத்தாரும் அரிய ஒரு கொழுகொம்பை இழந்தனர், நண்பர்கள் உற்றுழி உதவும் ஊன்றுகோலை இழந்தனர், தமிழ்மொழி ஒப்பற்ற ஒரு புலவனை இழந்துவிட்டது, எழுத்தாளர் உலகம் ஒரு வழிகாட்டியை இழந்தது; பெண்ணுலகம் பெறுதற்கரிய பெருந்துணையை இழந்தது, இளைஞர் உலகம் தன்னைக் கைதூக்கிவிடும் முதிய துணைவரை இழந்தது, தொழிலாளர் உலகம் தந்தையருள் ஒருவரை இழந்தது, சீர்திருத்த உலகம் ஒரு முற்போக்காளரை இழந்தது; பழமை பாராட்டும் முதியவர் உலகம் ஒரு பழைய பண்பினரை இழந்தது; சமரச சன்மார்க்கத்தினர் ஒரு தலைவரை இழந்தனர்; ஆம்! இத்துணைப்போர்களும் தம்தம்முடைய துணைவரைத் திரு. வி. க. என்ற ஒரு பெரியாரிடத்தில் கண்டு அமைதியுற்றிருந்தார். இன்று அவர் ஒருவர் இறந்தமையின் இத்துணைப்போர்களும் 'திசைகாட்டும் கருவி' இழந்த நாவாய் ஓட்டிகளாயினர். அதியமானை இழந்த தமிழ் உலகம் அன்று தவித்ததைக் காட்டிலும் இன்றைத் தமிழ் உலகம் பன்மடங்கு தவிக்கிறது, திரு. வி. க. வை இழந்து. இத்தகைய பெரியாரைப் பெற இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ அறியோம். ஆனால், ஒன்றை நினைந்து ஆறுதல் பெறலாம். 'தமிழ்நாட்டில் இன்னும் எத்தனையோ தொண்டுகள் எஞ்சி உள்ளனவாகலின், அவற்றைச் செய்து தீர்க்கும்வரை வந்து வந்து பிறப்பேன்' என்று அப்பெருமகன் கூறுவதுண்டு. எனவே மீட்டும் திரு. வி. க. நம்மிடையே தோன்றுவார்! அந்நாளை விரைவில் எதிர்பார்ப்போமாக.

தமிழ் முனிவர்

[பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் எம்.ஏ., பி.ஓ.எல்.]

"என்னுடைய ஆசிரியர் யாழ்ப்பாணத்தவரே; திரு. நா. கதிரைவேற்பிள்ளை அவர்களே எனக்குத் தமிழார்வத்தை ஊட்டி, என்னைத் தமிழ்ப்பணியில் ஈடுபடச்செய்த பேராசிரியர். பாலசுப்பிரமணிய பக்தசன சபையினையும் அவர்களே தொடக்கினார்கள். இதன் முப்பத்தாறாம் ஆண்டுவிழா அண்மையில் நடைபெறும். அதிலே தாங்களும் ஒரு விரிவுரை நிகழ்த்த வேண்டும். யாழ்ப்பாணத்தவர்கள் பேசும் தமிழ் தனிச்சிறப்பு வாய்ந்தது, அவர்களுடைய தமிழுணர்ச்சி தலைசிறந்தது; தூய தமிழ் — செந்தமிழ் — இன்றும் யாழ்ப்பாணத்திலுள்ளது." இவ்வாறு திரு வி. க. பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்க் கூறினார். சென்னைப் பல்கலைக் கழகத்திலே யான் தமிழாராய்ச்சி செய்து கொண்டு இருந்தபொழுது அவர்களைக் கண்டு உரையாட அவர்கள் இல்லத்துக்குச் சென்றேன். முதற் சந்திப்பின்போது அவர்கள் கூறிய இக்கருத்துரைகள் அவருடைய அன்பின் திறனையும், உள்ளத்து உயர்வையும் புலப்படுத்தின. ஒருமுறை அவர்களுடன் பழகும்வாய்ப்புப் பெற்றவர்கள் சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் அவரைக்கண்டு உரையாடி இன்புற விழைவதியல்பே. யானும் அடிக்கடி அவரைச் சந்தித்தேன்; உரையாடினேன்; உளம் மகிழ்ந்தேன். அக்காலத்திலே அவர் ஒரு தமிழ் முனிவராகவே காட்சியளித்தார். அவரைக் காணும்பொழுதெல்லாம் "ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்," தமக்கென முயலாநோன்றாள் பிறர்க்கென முயலுநர்" எனும் புறநானூற்றடிகளே என் உள்ளத்திலே தோன்றும்.

சென்றமாதம் நான் சென்னைக்குச் சென்றேன். "தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் பிறந்த நாட் கொண்டாட்டம். அனைவரும் வருக" என்று அழைக்கும் அழைப்புப் பத்திரங்கள் பெரிய எழுத்திற் சென்னை நகரத்தின் மதில்களிலே காட்சியளித்தன. ஆனால் திரு. வி. க. அவர்களோ மரணத்துடன் போராடிய வண்ணம் இருந்தார். மரணப்படுக்கையில் இருந்த காலையிலும் தமிழ்நாடு சிறக்கவேண்டும்; தமிழ்மொழி ஓங்க வேண்டும்; உலகம் வாழவேண்டுமென்றே அவர் விழைந்தார்.

பிறந்த மொழிபயின்று உணர்ச்சி பெற்றவுடன் அவர் தமக்கு உரியதாக்கிக்கொண்ட எண்ணம் "எல்லாரும் இன்புற்றிருக்க

வேண்டும்" என்பதே. அவருடைய சொல்லும் செயலும் இதனை நிறைவேற்றுதற்கே முயன்றன. இறக்கும்பொழுதும் அவர் உள்ளம் இப்பெரும் நோக்கத்திலேயே படிந்திருந்தது. இப்பொழுது அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். உள்ளம் கவர்ந்த உத்தமரை அவருடைய நண்பர்களும் அன்பர்களும் இழந்து விட்டனர்; ஒப்பில்லாத ஒரு தமிழ்முனிவரைத் தமிழ்நாடு இழந்து விட்டது; பேரன்பர் ஒருவரை உலகம் இழந்துவிட்டது. அவருடைய ஆருயிர் பேரின்பத்திற் றிளைக்குக.

இக்காலத்திலேயுள்ள மாணவரிடத்திற் குரு பக்தியைக் காணுதல் முயற்கொம்பாகி விட்டது. சென்ற தலைமுறையிலே கல்விகற்றுச் சிறப்படைந்தவர்களிடத்திலேயுள்ள பெருங்குணங்களிலொன்று குரு பக்தியாகும். திரு. வி. க. வின் குருபக்தி தனிச் சிறப்பு வாய்ந்தது. இதனைக்கண்டு வியப்படைந்து "ஆசிரியரும் மாணவரும்" எனும் கட்டுரை ஒன்றினை எழுதி இலங்கைப் பத்திரிகைகளில் முன்னர் வெளியிட்டுள்ளேன்.

திரு. வி. க. அவர்களைப்போலப் பரந்த கல்வியறிவும் சிறந்த தமிழ்ப்புலமையும் உடையோர் சிலரைத் தமிழகத்திற் காணலாம். ஆனால் அவரைப்போலத் தமிழ்மயமான—தண்ணளி பொருந்திய—ஈரம் நிறைந்த உள்ளம் உடையாரைக் காணுதல் முடியாது. அவருடைய உள்ளம் எப்பொழுதும் உயர்வையே உள்ளியது. அது காந்தீயத்திலும் வள்ளுவத்திலும் மார்க்கீசத்திலும் தோய்ந்து விளங்கியது.

அன்பும் சிவமும் ஒன்றென்று வாய் வேதாந்தம் பேசும் பலர் உளர். இவர்களுடைய உள்ளத்திலே ஆணவம் மண்டியிட்டுக்கொண்டிருக்கும்; இவர்கள் சாதி குலம் பிறப்பெனுஞ் சுழியுள் அகப்பட்டுத் தடுமாறுவார்கள்; மேலே மிதந்து உண்மை கண்டு ஒளிபெற வழிதெரியாது பிதற்றுவார்கள். இவர்களும் உண்மையினை அறியத்தக்கதாகச் சமரச சன்மார்க்க நெறியினை விளக்கிக்காட்டிய பெருஞ் செயலாளர் திரு. வி. க. அவர்களே.

அன்பு கனிந்து, அருள் சுரந்து, அறம் மலர்ந்த வாழ்க்கையினை அவர்கள் நடாத்தினார்கள். உலகு உய்யவேண்டுமானால் வள்ளுவர் வகுத்த அன்புநெறி எங்கும் பரவவேண்டுமென்று உணர்ந்தார்; உரைத்தார். மறந்தும் பிறன்கேடு சூழாத பேரியல்புக்கும், இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யும் அருஞ்செயலுக்கும் அவர் எடுத்துக்காட்டாக மிளிர்ந்தார்.

அவர் தம் உள்ளத்து உயர்வும், தூய்மையும், ஒளியும் அவருடைய பேச்சிலும், எழுத்திலும், செயலிலும் வெளிப்

பட்டன. சிறப்பியல்புகள பலவாய்ந்த விறுவிறுப்பான உரைநடையினைத் தமிழுக்குத் தந்தார்; அருள நலங்கனிந்த அமுதனைய பாடல்களைப் பாடினா; ஒப்புயர்வறற நாவேந்தராகவும மிளிர்ந்தார்.

தம நாட்டுமக்கட்கு எந்த எந்தத் துறையில் அன்புத் தொண்டு ஆற்றவேண்டும் என்று அவா கருதினாரோ அநதந்தத் துறையிலெல்லாம தொண்டுசெய்து வெறறிகண்ட பெரு வீரர் அவா, உணமைத் தொண்டினாலே மககளின் உள்ளஙகளைக் கொள்ளைகொண்ட தலைவா அவா தமிழ்நாட்டிலே அவர் ஈடுபடாத தேசிய இயக்கங்கள் இல்லை என்றே கூறலாம.

அவருடைய ஆராயச்சி சென்ற துறைகளும் அவர் எழுதிய நூல்களும பலவாகும. சிவனடியாா சிறப்புடன் பெண்ணின் பெருமையைப பேசினா, காநதியததுடன் வள்ளுவத்தின் ஒறறுமை காட்டினார்; கடமையின் இயலபையும் உரிமையின் பெருமையையும விளக்கினா; காதலின சிறப்புடன் துறவின் இயலபையும் நவின்றா; சாதிமதப பூசல்களையுந சாததிர கோத்திரச சணடைகளையுந தகர்ததாா. மாணவாக்கும் விருந தளித்தார்; தொழிலாளிகளுககும தொண்டாற்றினா; பொதுவுடைமைக்கும புது விளககங் கொடுததாா.

இததகைய பெருஞ் செயல்களை எல்லாம் செய்த தமிழ் முனிவா திரு வி க அவாகளைப் போறறி அவா வகுததுக்காட்டிய வழியினைக கடைபபிடிததலே அன்பர்களா அவருககுச செய்யுங் கைம்மாறாகும் இன்னும, அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சிறநத முறையில் எழுதி வெளியிடுதலும பாலசுப்பிரமணிய பகததசன சபையின் முன்றிலில அமைக்கபபடவிருக்கும திரு. வி. க. மண்டபத்தை அழகாக விரைவில் அமைததலும் இன்றியமையாதன.

த மி ழ்

தமிழ் என்பதற்கு, 'இனிமை' என்பது பொருள். 'தமிழ் தழீஇய சாயலவர்' எனறும, 'தமிழ்சேர் காஞ்சி' எனறும, புலவா 'இனிமை' எனனும பொருளபட்ட 'தமிழ்' என்னுஞ் சொலலை ஆணடிருத்தல காணக. பழமை மக்கள் இயற்கையிலூறுந் தமிழையே, பின்னைத தாஙகள் அவ்வியற்கைப் பொருளுக்கிட்ட சொன்மொழிக்கும் வழஙகினர் போலும!

திரு. வி. க. தமிழ்த் தென்றல்—பக்கம்-சுஎ.

எழில் உருவம்

[சித்தாந்த கலாநிதி, திரு. ஔவை - சு. துரைசாமி பிள்ளை]

திரு. வி. க. அவர்களின் மறைவு தமிழ்ப் புலமைச் செல்வர் ஒருவரது மறைவாகும். கால நிலையும் மக்கள் மனநிலையும் வாழ்க்கை நிலையும் நன்கறிந்து அவற்றிற்கேற்ப உயரிய கருத்து வழங்கும் அவரது பேச்சும் எழுத்தும் நாட்டில் பெரும்பணி செய்துள்ளன.

தமிழ் இலக்கிய உலகில் நம் திரு. வி. க. சிறு சிறு வாக்கியங்களால் திருந்திய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக எழுதும் புதுமுறை எழுத்து நடை கண்டவர். எழுத்து நடையில் திரு வி க. நடையென்ற ஒரு சிறப்பு நடையும் நிலவுகிறது. 'மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்' 'பெண்ணின் பெருமை,' 'முருகன் அல்லது அழகு' முதலிய நூல்கள் பயிலுந்தோறும் இன்பவொளி வீசி நிற்கின்றன.

அரசியல் உலகில் காங்கிரசில் சேர்ந்து தமிழ்நாட்டுக் காங்கிரசு மாநாடுகளிலும் பொதுமேடைகளிலும் திருந்திய செந்தமிழில் அரசியல் உரிமைக் கருத்துக்களைப் பல்லாயிரம் மக்கள் கூடிப் பரிந்து கேட்குமாறு பேசுவார். திரு வி. க. பேசவருகிறார் என்றால் ஆண்களும் பெண்களுமாக மக்கள் திரண்டு விடுவர்.

சமயவுலகில் திரு. வி. க ஒரு தனித்துறவியாக விளங்கினார். அவர் சமயக்கண்முன் குறுகிய நோக்கங்களும் பொருளற்ற கட்டுப்பாடுகளும் எதிர்நிற்பதில்லை. சைவசமயத் திருமுறைகளில் பேரிடம்பெறும் திருத்தொண்டர் புராணத்துக்கு அவர் பொறித்துள்ள முன்னுரையும் கருத்துரையும் அவரது விரிந்த உண்மையறிவை எடுத்துக்காட்டுவனவாகும்.

சமுதாய உலகில் தொழிலாளர் இயக்கம், பெண்ணுரிமை இயக்கம், சமதரும இயக்கம் ஆகியவை திரு வி. க வின் பேராதரவு பெற்றவையாகும். புத்தர், காந்தி, இராமலிங்கர், தாயுமானர் முதலிய பெருமக்கள் வழங்கும் உயரிய கருத்துக்களுக்கும் புதுமுறையில் விளக்கந்தந்து இன்றைய வாழ்வுக்கு ஆக்கமாகும் வகையில் திரு வி க எழுதியுள்ளவை என்றும் யாவரும் கற்றுப் பயன்படும் நிலையில் உள்ளன.

எளிமையில் அருமையும் பணிவில் பெருமையும், வறுமையில் செம்மையும் திரு. வி. க.வின் உருவில் திகழ்ந்து

நின்றன. வெள்ளிய கதராடையுடுத்து நெற்றியிற் சந்தன மிலங்க மெல்ல நடந்துவரும் அவருடைய மேதக்க திருவுடல் மறைந்தது. மென்னகை தவழும் முறுவல் மறைந்தது மெல்லிய தமிழ் ஒழுகும் பேச்சிடையே இடதுகை யெழுந்து எண்ணத்தைக் காட்டும் திரு வி க வின் எழில் உருவம் மறைந்தது எல்லாம் மறையினும் அவருடைய எழுத்தும் பேச்சும் எம்முடைய நெஞ்சைவிட்டு மறையா. அவர்க்கென அவர் நினைவுக்கென, இன்றைய தமிழறிஞர்கள் மண்டபம் நிறுவ முயல்கின்றனர் அம்முயற்சி இனிது நிறைவெய்துக.

ஏரி நிறைந்தனைய செல்வர்

[திரு. வல்லை, பாலசுப்பிரமணியம், சென்னை.]

தமிழ்நாடு நோற்ற நோன்பின்பயனாகத் திரு. வி. க. தோன்றினார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார். நிறைந்த புகழுடன் மறைந்தார் காலம் தனது கடமையை ஆற்றிவிட்டது. அதுகுறித்து நாம் கவலைப்படவேண்டா

திரு வி க. அவர்களின் வாழ்க்கையைப்பற்றி எவர் எது சொல்லினும் சொல்லுக அவர் வாழ்க்கை முழுவெற்றியென்று நான் சொல்லுவேன். அவ்வாறாயின், அவ் வெற்றியின் இரகசியம் என்ன? தமக்கென வாழாது பிறர்க்குரியராய் வாழ்ந்தமைதான். அவர் எல்லார்க்கும் நல்லர். யாருக்கும் பகைவர் அல்ல. எளிய வாழ்வும் உயர்வுள்ளமுமே அவர்தம் சிறப்பியல்புகள். எல்லார்க்கும் எளிவந்த காட்சியினர் பிறர் குணங்களேயன்றிக் குற்றங்கள் அவர் கண்களுக்குத் தோன்றா. ஒவ்வொருவரும் தத்தமது முன்னேற்றத்துக்கு அவரிடமிருந்து ஆலோசனை பெறக்கூடும் கலைப் பிசைந்து கனியாக்கும் கலைஞர் அவர். மிகச் சாமானிய அறிவு படைத்தவர்கூட அவரிடமிருந்து ஓர் ஆக்கவுரை பெற்று, வாழ்வின் பல துறைகளில் பெரிதும் முன்னேற்ற மடைந்திருக்கின்றனர். தமிழ்நாட்டுத் தலைவர்களில் ஒரு சிலராயினும் ஒல்லும்வகை திரு. வி. க. ஆக முயலவேண்டும்.

நூல்நிலையம் எரிந்தது

[திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி]

திரு. வி. க. மறைவு என்னைத் திடுக்கிடச் செய்தது. மறைவுக்கு முதல்நாள் என் இறுதி வணக்கத்தை அவர்கட்கு நேரில் அளித்தது எனக்கு இப்பொழுது ஆறுதலளிக்கிறது.

திரு. வி. க. பரம்பரைப் புலவர் வரிசையில் இறுதியாகத் தலைமைபெற்று விளங்கியவர். அவரை ஒரு உயர்ந்த நூல்நிலையமெனக் கூறலாம். அது இன்று எரிந்தது. நாம்தான் எரித்தோம். தமிழ்ப்பகையை ஒழிக்காமல் தமிழனை ஒழித்துவிட்டோம். தமிழ்மொழியை வளர்க்காமல் தமிழ் எரித்து வாழ்கின்றோம்.

திரு. வி. க. ஒரு குணக்குன்று. புலவர் தலைவன். தொழிலாளர் தோழன். அரசியல் அறிஞன். சமயத்தொண்டன். பத்திரிகை ஆசிரியர். சிறந்த பேச்சாளி. சீர்திருத்தவாதி. நடுநிலை பிறழாத நல்லோன்.

இத்தனை துறையிலும் தன்னலங்கருதாது தொண்டு செய்துவந்த தமிழ்நாட்டுப் பெரியோன்.

மறைவுக்குச் சில நாட்கள் உள்ளபோது அவர் வறுமையால் வாடுகிறார் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. அதனைக்கண்ட மதுரைத் தமிழ்வள்ளல் -கருமுத்து- தியாகராசச் செட்டியார் அவர்கள் ரூபாய் இருநூற்றைம்பது அவருக்கு அனுப்பி வைத்தார். இது செட்டியார் அவர்களின் உயர்ந்த பண்பை விளக்கியது. திரு. வி. க. அவர்கள் "என் வாழ்நாளில் இதுவரை எவரிடத்தும் எத்தொகையும் பெற்றதில்லை. இது முதலாவதாக இருக்க வேண்டாமே. மன்னிக்கவும்," என்று எழுதிய கடிதத்தோடு அப்பொருளைச் செட்டியாரவர்கட்கே திருப்பி அனுப்பி வைத்தார்.

இது திரு. வி. க. அவர்களின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. இவை இரண்டையும் எண்ணும்போது "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதனெதிர் கொள்ளேனென்றல் அதனினும் உயர்ந்தன்றே," என்ற புறநானூற்றுப் பாடலின் இரண்டடிகள் நம் நினைவுக்கு வருகின்றன.

இந்தத் திரு. வி. க. அவர்களின் உயர்ந்த பண்பு சிறந்த தமிழ்ப்பண்பும், தமிழர் பண்புமாகும். அதுமட்டுமல்ல, இன்

றைய வயிற்றுப்பிழைப்பே தொழிலாகக்கொண்ட அரசியல் வாதிகட்கு இது ஒரு சவுக்கடியுமாகும்.

திரு. வி க. ஒரு படிக்கும் நூல்நிலையமல்ல. பேசுகின்ற நூல்நிலையமாகத் தமிழகத்தில் உலவி வந்தது. எத்தனைபேர் அதனைப் பயன்படுத்திக்கொண்டவர்கள்? என்றால், விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையாகவே இருக்கும். இறந்த உடல் சுடுகாடு செல்லும்போது உடன்சென்று திரும்பிய உடல்களின் எண்ணிக்கை பல்லாயிரம் இருக்கும். இதனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமக்கு இரண்டே இரண்டுதான் தெரியுமென்று தோன்றுகிறது. ஒன்று, அறிஞர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களை வெறுத்து வாழ்வது, மற்றொன்று இறந்த பிறகு அனுதாபங்கூறி அழுதுகொண்டிருப்பது இது தமிழ்நாட்டின் தீயூழேயாகும்.

தமிழறிஞர்கள், ஒருவர்பின் ஒருவராக மறைந்துகொண்டும், தமிழ்மொழி, தமிழ்ப்பகைவர்கள் ஒருவர்பின் ஒருவரால் அழிக்கப்பட்டும், தமிழ்நாட்டைத் தமிழ்நாடு என்று கூற வெட்கப்பட்டு "எஞ்சிய சென்னை மாகாணம்," என்று கூறுகிற மக்களால் ஆளப்பட்டும் வருகிற தமிழகம், எப்படி வாழும்? வாழ்ந்துதான் ஆகவேண்டும். "வாழும்," என்பது திரு. வி க. அவர்களின் முழு நம்பிக்கை.

தமிழகமும், தமிழறிஞர்களும், தமிழ்மக்களும் ஒன்றுபட வேண்டும்; இன்றேல் தமிழ்நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் வாழ்வில்லை "வாழவைப்போம், வாழ்வோம்" என்ற உறுதிப்பாடு ஒன்றையாவது திரு. வி. க அவர்களின் உடலை எரித்துவிட்ட இன்றேனும் எடுத்துக் கொள்வோமாக!

முருகு

முருகெனுஞ் சொல்வழக்குக் காலத்தைக் காண்டலே அரிதாயிருக்கிறது. அங்ஙனமாக, அச்சொற்பொருள் காலத்தை ஆராயப் புகுவது அறியாமையாகவே முடியும். இவ்வாராய்ச்சியில் தலைப்பட வேண்டுவதில்லை. முருகெனும் செம்பொருள் காலஎல்லைக்கு உட்பட்டதன்று என்று கொள்வதே அறிவுடைமை. முருகன் காலங்கடந்த கடவுள்; இயற்கை என்று உண்டோ, அன்றுமுதல் முருகனும் உளன். இயற்கை அநாதி; முருகனும் அநாதி.

திரு. வி. க. முருகன் அல்லது அழகு—பக்கம்-உரு.

நாகரிகப் பண்பாளர்

[வித்துவான், திரு. அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ.]

தமிழர்தம் நாகரிகப் பண்புக்கு மாறுவகையில் நம் கண் வாழ்ந்தவர் தமிழ்ப்பெரியார் திரு வி. க. அவர்கள். வாழும் நாள்வரை தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே இருந் தார் செந்தண்மைபூண்ட அந்தணராகவே திகழ்ந்தார். சீலம் தாங்கிய செம்மலாக நின்றார். தமக்கென ஒன்றுமின்றித் தமிழர்வாழ்வே தம்வாழ்வாக—தமிழ்நாட்டு ஏழைகள் வாழ்வே தம் வாழ்வாக—வாழ்ந்த பெரியார் அவர்.

தம உடல் கெடினும் உடலுக்கு ஊறுசெய்வதாயினும் உற்றவா கொடுக்கும எப்பண்டத்தையும் உவந்து ஏற்று உண்டு அவர்களை மகிழ்வித்து 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்' என்ற சொல்லும் மெய்யாம் என்ற வகையில் நாகரிகப் பண்பில் வாழ்நதவர் அவர். ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லாது செய்ய முயன்றவர் அவர். கட்சிவேறுபாடுகளுக் கெல்லாம் அப்பால் நின்று தமிழ்—தமிழன்—தமிழ்நாடு— தமிழர்பண்பாடு என்றே எண்ணி, சொல்லி வாழ்ந்துவந்தவர் அவர். செலவத்தையும் பட்டத்தையும் பதவியையும் வேண்டா மென ஒதுக்கி, ஏழை பாட்டாளிமக்களோடு ஏழைபங்காள ராய் வாழ்ந்த ஏந்தல் அவர். ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ வழிவகுத்துப் பெண்ணினத்தைப் பெரு மைப்படுத்திய தாயுள்ளம் படைத்த தயவாளர் அவர். சமய வெறிகளையும சழக்கர் நெறிகளையும் போக்கிச் சமரசத் திருக் கோயிலுக்கு வழிகாட்டிய வள்ளல் அவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை வாழ்விடை வாழ்ந்து காட்டி எல்லோரையும் உற்றவராக ஓம்பியவர் அவர்.

இத்தகைய அரும் பண்பாளர்—எல்லா வேறுபாடுகளையும் தாண்டிய தன்மையார் சென்ற 17-9-53ல் மறைந்தார். அவர் பிரிவு தமிழ்நாட்டுக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்று. தமிழர் எல்லோரும் எல்லா வேறுபாட்டையும் மறநது அவருக்கு அன்று அஞ்சலி செய்தனர். அவர் பருஉடல் மறைந்தது. நுண்ணுடல் - என்றும் இம்மண்ணில் நிலவி அன்னை தமிழை ஓம்பும் என்பது உறுதி! •

தமிழகத்தின் பெருந்தகை

[திரு. கா அப்பாதுரை எம் ஏ., எல் டி.]

அறிஞர்களுக்கு, கலைஞர்களுக்கு, மக்களை இயக்கும் தலைவர்களுக்குத் தமிழகத்தில் என்றும் பஞ்சம் நேர்ந்ததில்லை. ஆயினும் பொதுநிலைக்கு சிறப்புடைய அறிஞராகத் திரு வி. க. இருந்ததுபோல் வேறு எவரும் இருந்ததில்லை அவர் தமிழகத்தின் அறிஞர் மட்டுமல்ல. அவர் சிறப்பு வகையிலே 'தமிழக அறிஞர்' என்று தனிப்படக் குறிக்கத்தக்கவர். தனித்தனி அறிஞர்கள் அறிவுகளையெல்லாம் ஒன்றுகூட்டி இணைத்துத் தமிழக அறிவாக்கும் பேரறிவுப்பண்பு அவரிடம் இருந்தது.

அறிஞர்கள் பெரும்பாலும் அறிவு என்னும் சிறைக்கூடத்துக்குள்ளேதான் இருப்பர். மக்களிடையே வந்து உலவமாட்டார்கள். தமிழ்ப்புலவரோ புலவருலகம் என்ற சீரிய அரங்கில்தான் ஊடாடுவர். அம்பலம் வந்து அதைத் தம் புகழ் ஆடரங்காக்குவதில்லை. திரு. வி. கலியாணசுந்தரனார் அறிஞருள் பேரறிஞர். ஆனால் அவர் மக்களிடையே உலவ, தம் அறிவை அவர்களிடையே உலவவிட, பிற அறிஞர் அறிவுக்கருத்துக்களைத் தம் அறிவால் வகுத்தியக்கி அவர்களுக்குத் தெளிவூட்டத் தயங்காத சீரிய அறிஞராயிருந்தார் தமிழ்ப்புலவர்களிடையே அவர் ஒரு தமிழ்ப்புலவர். ஆனால் அவர் தமிழ் மாணவர்களுக்கு மட்டும் ஆசிரியராயிராமல், அவர் ஆசிரியர் மறைமலையடிகளைப் போலவே ஆசிரியர்களுக்கும் ஆசிரியராய் இருந்தார். அவர் தமிழ் பழைய நூல்களை மட்டும் சுற்றிவராமல் புது நூல்களாக்கிற்று நூல் கடந்து பத்திரிகை உலகை அளாவி அவ்வுலகில் தமிழர் தமிழ் உலவும்படி செய்தது. அத்துடன் தமிழர் தமிழ் தமிழகத் தொழிலாளரிடையேயும் ஊடாடி, அவர்களைத் தமிழ்த் தொழிலாளர் ஆக்கவும் பெரிதும் பயன்பட்டது. அறிஞர், தமிழ்ப்புலவர் ஆகிய இரு திறத்தினரிலும் மக்கள் அரசியல், சமுதாய, பொருளியல் வாழ்விலும் தொழிலாளர் வாழ்விலும் ஈடுபட்ட முதல் அறிஞர், புலவர் அவரே. அத்துறைகளில் இந்நாள் வரை முதன்மையுடைய அறிஞரும் புலவரும் அவரே.

செப்டம்பர் 17—தமிழகம் அவரை இழந்துபெற்ற வடு நெடுநாள் நீங்காதிருக்கும் வடு ஆகும். ஏற்கெனவே மறைமலையடிகள் நீங்கியதனால், கிட்டத்தட்ட என்றும் நிரம்புறுமோ என்று நினைக்கத்தக்க பெருவடு தமிழன்னையின் புகழுடலில் ஏற்பட்டுள்ளது. அந்த வடு இப்போது மிக ஆழ்ந்துவிட்டது.

தமிழின் சிறப்புக்குரிய ஒரு மறைமலை, தமிழர் சிறப்புக்குரிய ஒரு திரு. வி. க இவ்விரண்டு பெரியார்களின் இடத்தினை ஓரளவு நிரப்பவல்ல மறைமலை மரபையும் திரு வி. க. மரபையும் உண்டுபண்ணிப்பேணும் பெரும்பொறுப்பு தமிழகத்தின் மீது சார்ந்துள்ளது.

திரு. வி. க. வுக்குத் தமிழர் நினைவுச் சின்னங்கள், நினைவு நிலையங்கள், அமைப்பது மிகமிக அவசியமே. ஆனால் அதனினும் சால அவர் மரபு பெருக்குதல் இன்றியமையாதது. சமய வேறுபாடுகளால் முன்பு தமிழ் அடைந்த இன்னல் பெரிது இன்று கட்சி வேறுபாடுகளாலும் மாற்சரியங்களாலும் தமிழகம் அடையும் இன்னல்கள் அவற்றினும் குறைந்தவையல்ல. தாம் கொண்ட கொள்கைக்கு மாறுபடாமல், தம் கொள்கைக்கேற்ற கட்சிக்கும் அதற்கு அணுக்கமுடைய கட்சிகளுக்கும் நிலையங்களுக்கும் உழைத்துக்கொண்டே, கட்சி கடந்த நாட்டு நலன், நாடு கடந்த மொழிநலன், மக்கள் நலன், இத்தனைக்கும் அடிப்படை வேர் ஆன தொழிலாளர் நலன் ஆகியவற்றில் என்றும் திரு வி கலியாணசுந்தரனர் வழுவாத பேருயிர் நோக்கம் உடையவராயிருந்தார். அப் பண்பைத் தமிழர்பேணும் முறையில் திரு. வி க. பண்பும் திரு. வி க மரபும் நீடு நிலவவேண்டும்.

எச்சரிக்கை

கொலை களவு கள் காமம் பொய் முதலிய பாவங்கள் பரவுதற்குரிய வினைகள் பெருமிதமாக இக்கால உலகில் நிகழ்ந்து வருகின்றன. அப்பாவங்களின் வளர்ச்சிக்கு இடந்தருவது இயற்கைவளர்ச்சியைத் தகைவதாகும் ஆதலால் மாணுக்கர் சீலத்தை வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவாராக... .. ..

காப்பிக்குடி, சுருட்டு பீடி சிகரெட் குடி முதலியன, வாழ்விற்கு இன்றியமையாதன வல்ல இஞ்ஞான்று உலகம் இவை கட்குப் பாழாகிறது. இப்பாழுக்கு இரையாகா திருக்குமாறு மாணுக்கரை எச்சரிக்கை செய்கிறேன். இயற்கைக்கு மாறுபட்ட வினைகளில் தலைப்படாது, இயற்கையோடியைந்த வினைகளில் தலைப்படுதல் நலம் என்று சுருங்கச் சொல்கிறேன்.

திரு. வி. க. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து—பக்கம்-௧௦அ.

அன்பும் அறனும்

[டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.]

திரு வி. க. என்றவுடன் திரு. வி. கலியாணசுந்தர முதலியாருடைய அன்பும் அறமுமே என் கண்முன் நிற்பன. அவர் மன்பதையிடத்து அன்பு பூண்டொழுகிய அந்தணர்; அறநெறி வழுவாது வாழவேண்டும் என்னும் எண்ணத்துடன் தொண்டாற்றிய தலைவர். பிறர்க்கு இன்னாமை செய்யாது பிறர் நலம் பேணிய பெருமை அவருடையது. குழந்தைமுதல் முதியவர் வரை எல்லாரையும் அன்பினால் அணைத்து ஆர்வத்தினால் தழுவி அருளுள்ளத்தொடு பிணித்துக்கொண்ட பெற்றி அவருடையது.

திரு. வி. க. அல்லற்படும் மக்கட் கூட்டத்துக்காக ஓயாது உழைத்தவர்; சமூக வாழ்க்கையில் உயர்வு தாழ்வினை நீக்குதற்கு உறுதி செய்துகொண்டவர்; கடவுள் முன்னிலையில் அனைவரும் ஓரினம் ஒரு கூட்டம் என்பதை அடிக்கடி பல மேடைகளிலும் பத்திரிகைகளிலும் எடுத்து இயம்பி வந்தவர்; எந்நெறியினின்றும் முழுமுதற் கடவுளை வழிபடக்கூடும் என்றும், குறிப்பிட்ட ஒரு நெறி துணையாக வழிபடுவோரே உய்தியடைவர் என்பது உண்மையாகாது என்றும் அடிக்கடி சொல்லி வந்தவர், புறவேடத்தினும் அகநிலையே நன்றாக இருத்தல் வேண்டும் என்பதை எஞ்ஞான்றும் வற்புறுத்தி வந்தவர்.

> "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்"

என்ற திருவள்ளுவர் மொழிக்குக் காட்டாக அமைந்த இப் பெரியார்,

> "வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
> யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்"

என்ற சிலப்பதிகார அடிகளைப் பன்முறை நினைப்பதுண்டு. ஆயினும், அழிதன் மாலைத்தாகிய பொருட்செல்வத்திற் சிந்தை வைத்திலராகலின், அதனை அவர் நிரம்ப எய்தினாரல்லர். எய்திய செல்வத்தையும் பிறர் வஞ்சித்து எடுத்துக்கொண்டாலும், அவரிடத்து அதுகாரணமாக வெகுண்டவரும் அல்லர். அவ்வாறு, தம் சுற்றத்தாரோ பிறரோ தம்முடைய பொருளை அவாவிக்கொண்டனர் எனின், அந்த அளவுக்குத் தமக்கு அமைந்த துறவு நல்லதாயிற்றே என்று நினைக்கக்கூடிய பேருள்ளம் படைத்த முனிவராய் வாழ்ந்தார் முதலியார்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்ற திருக்குறளைக் கற்றுத் தேர்ந்ததோடன்றி அவ்வழி யொழுகிய விழுப்பம அப் பெரியாருடையதாயிறறு.

இயற்கையை வழிபடுவதே இறைவனை வழிபடுவதாகும் என்ற உண்மையையும, அழகுடைய பொருள்களிலே ஆண்டவன் அமாநதிருககிறான் எனற உண்மையையும் அழகுற இனிய தெள்ளிய தீநதமிழிலே எடுதது எடுதது இயமபிவநதார திரு. வி க. அவருடைய சமரச மனப்பான்மை நாட்டிற்கு இக் காலத்தில அதிகமாக வேண்டபபடுவது சமயம காரணமாக, மதங காரணமாக மக்களை தமமுள்ளே மாறுபட்டுப் பூசலும் கலாமும் விளைததுககொண்டு இகலி அழிநதொழிநது போவதைத தவிாகக அவர் பாடுபட்டுளளார்.

தம் தாய்மொழியாகிய தமிழிடதது அவருக்கு மட்டிலாக் காதல் உண்டு தமிழிலே மாணவரும் பிறரும் நன்றாக எழுது தற்கும் பேசுதற்கும் அடிகோலியவா அவர் என்று உரைககின், அவ்வுரை புனைநதுரை ஆகாது. "தேசபகதன்", "நவசகதி" முதலிய பததிரிகைகள வாயிலாகவும், கணககிலடங்காப் பல வேறு விரிவுரைகள் வாயிலாகவும நாடெங்கணும தமிழ் பரப பிய அப பெரியாருக்குத தமிழுலகு பெரிதும கடபபாடுடையது. "தமிழ்த் தென்றல", "முருகன் அலலது அழகு", "பெணணின பெருமை", "உளளொளி" முதலிய அவருடைய நூல்கள குறிப்பிடததககன. நலல தமிழநடை பயில விரும்பும தமிழ் மக்கள் இவற்றை வாங்கிப் படிததுப பழகிக்கொளளுதல நலல தொன்றாகும,

தமிழ்மொழியின் ஆக்கததிற்காக உழைத்தவரும், அதற்கு ஊறு செயயும் சூழ்ச்சிகளைத தகாத்தவரும ஆகிய திரு வி. க. வை மீண்டும என்று காணபேம எனத தமிழுலகு ஏங்குகிறது. அவா மறைநதார் ஆயினும, அவருடைய உணாசசிகள ஒடிநத உளளஙகளுககு ஊககம அளிககும எனவே நம்புகின்றேன்.

செந்தண்மை பூண்ட அந்தணர்

[திரு. ஆ. அருள்தங்கையா]

தமிழ்ப்பெரியார் திரு. வி. க. வின் மறைவு என்னைத் துன்பக்கடலில் ஆழ்த்திவிட்டது. திரு வி. க வை, நான் முதன் முதல் கண்டதும் செந்தமிழ்க்கேன் உண்டானதும் 1924-இல் தூத்துக்குடியில். 1936-இல் நான் சென்னைக்கு வந்தேன். நான் வந்த அடுத்த மாதமே அப்பெரியார் நட்பு எனக்குக் கிடைத்தது. அதனைப் பெறற்கரும் பேறென நான் கருது கிறேன்.

திரு. வி. க பத்தாண்டுகட்கு முன் பெரிய மாணவர் கூட் டம் ஒன்றில் "திரு. வி. க மாண்புமிக்க அந்தணர்" என்று நான் சொன்னேன். "யான் இன்னும் அந்தண்மை எய்த வில்லை, அந்தண்மை எய்தவேண்டுமென்பதே என் குறிக் கோள்" என்று அவர் கூறினார். "தாங்கள் அந்தணர் அல்ல ராயின், அந்தணரும் உளரோ" என்று நான் சொன்னேன். திரு. வி. க. செந்தண்மை பூண்டொழுகிய அந்தணர் என்பது அவரோடு பழகிய அனைவருக்கும் தெரியும்.

முற்றத் துறந்த முனிவர்

அவர் துறவுக்கோலம் பூண்டவர் அல்லர். அவர் கள்ளத் துறவைக் கடிந்தவர், உள்ளத் துறவால் உள்ளொளி கண்டவர். அவர் பலவகைத் தொண்டு செய்தவர்; ஆயினும் எவ்வகைப் பதவியையும் நாடாதவர். அவா என்பதனை அறவே அறுத்த பெரியார் அவர் "பொருட் செல்வத்தையாதல் அஃது இன்மை குறித்து வருந்தும் உள்ளத்தையாதல் இறைவன் எனக்கு வழங்கவில்லை" என்று அவர் கூறியிருக்கிறார் ஓடும் செம்பொனும் ஒன்றென நோக்கியவர் அவர். அவர் கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் அவர் முற்றத் துறந்த முனிவர். உள்ளத்தின் அமைதி குலைந்து அவரிடம் செல்வோர் உள் ளொளி பெற்றுத் திரும்புவர்.

செந்தமிழுக்குச் சிறப்பளித்த செம்மல்

தேனினும் செந்தமிழ் இனிப்பதென்பதை அவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் காட்டிவிட்டார். இனிமை பயக்கும் இலக்கிய நடையில் அவர் பேசினார், எழுதினார் எப்பொருளை யும் இனிய தமிழில் வன்மையாகச் சொல்லலாம் என்பதைக் காட்டியவர் அவர்.

கலைஞர் கால்டுவெல் "தமிழ் ஒன்றே இந்திய மொழிகளுள் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது" என்றார். மாண்புமிக்க மறைமலைஅடிகள் இன்பமூட்டும தனித்தமிழில் நூலகள் செய்து தமிழின் தனித்தியங்கும் ஆற்றலைத் திறமையாய்க் காட்டினார். திரு வி க இலக்கியம, சமயம் இவைபற்றிய கூட்டங்களில் மட்டுமன்று, அரசியல் பேரவையிலும், தொழிலாளர் கூட்டத்திலும், தோதல் கூட்டங்களிலும் ஆற்றல் விளங்கச் செநதமிழில் பேசி மககள்மனததைக் கவர்நதாா 'தேசபக்தன்' நாள்இதழிலும, 'நவசக்தி' கிழமைஇதழிலும் செந்தமிழே எழுதினார். அவா பல்வகைப் பொருளகள பறறியும் நூல்கள் எழுதி, கால்டுவெலின் கூற்று உண்மை என்பதைக் காட்டிவிட்டார்.

மேனாட்டு அறிஞர் வின்ஸலோ "இக்காலத்து மொழிகளுள் சொல்லாற்றலில ஜெர்மன் மொழியையும் ஆஙகிலத்தையுமே தமிழுக்கு இணையாகக் கொளளலாம" என்று எழுதியிருக்கிறார் திரு வி க. காலததில அவர் வாழ்ந்திருந்தால், "அவ்விரு மொழிகளுமே தமிழுககு இணை யாகா, அவற்றினும வன்மை மிக்கது தமிழ்" என்று சொல்லியிருப்பார்

திரு. வி. க தமிழ், வன்மைமிக்க தமிழ், இனிமை கொழிக்கும தமிழ், பழமையும் புதுமையும் கலநத தமிழ், செந்தமிழுக்குச் சிறப்பளித்த செம்மல் அவர் அவர் பேசிய தமிழ் வாழ்தல் வேண்டும்; அவா எழுதிய தமிழ் வளர்தல் வேண்டும். திரு. வி. க. புகழ் ஓங்குக.

முறையீடு

குறையுடையேன் கோதுடையேன்
குணமில்லா நடையுடையேன்
கறையுடையேன் கரவுடையேன்
கருணையில்லாக கருததுடையேன்
சிறையுடையேன சினமுடையேன்
சீரில்லா நெறியுடையேன
இறையவனே கடையேறும
இனியவழி காட்டாயோ.

திரு. வி. க. பொதுமை வேட்டல்—பக்கம் - கூஙு.

அருமைச் சகோதரர்

[திருவாட்டியார் பண்டிதை. எஸ். கிருஷ்ணவேணி யம்மையார்]

உலகில் மக்கள் பிறத்தலும் இறத்தலும் இயற்கையே யாயினும், சில அறிஞர்களின் பிரிவு, எவராலும் ஈடுசெய்ய இயலாத இழப்பை உண்டாக்கிவிடுகிறது. இதனால், உலகம் பெரிதும் வருந்துகிறது. இப் பேரறிஞர்களுள் நம் அருமைச் சகோதரர்—திரு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் ஒருவராவர். சிலஆண்டுகளாய் இவர்தம் கண்ணொளி மழுங்கியது; உடல்வன்மை குன்றியது. ஆயினும், இவர் உளத்தின் உரமோ, அறிவின் ஆற்றலோ, நினைவின் நிலையோ சிறிதும் குறைந்தில. அவ்வமயம் இவர் ஆக்கித்தந்த சில அரிய நூல்களே இதற்குச் சான்று பகருகின்றன. 'இம்முறையில் அறிஞர் எந் நிலையிலும் பயன்படத் தக்கவரே', என அறிகின்றோம்.

இப் பெரியார் எளிய வாழ்க்கையும் உயரிய நோக்கமும் உடையவர்; தமிழ்த் தலைவர்; தமிழ்நாட்டுத் தந்தையார்; அறத்துறந்த முனிவர்; ஆசைப்பேயை அகற்றிய அறிஞர்; வீரப் பேச்சாளர், அழகிய எழுத்தாளர்; பிறர் நலத்திற்கெனவே உழைத்த பெற்றியர்; பிறர் குற்றங்காணாப் பெருந்தகையர்; உண்மையை அஞ்சாதுரைக்கும் உத்தமர், ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பியவர். இங்ஙனமே சகோதரரின் குணநலங்களை எழுதிச்செல்லின், அவற்றின் முடிவு காணுதல் அருமையினு மருமை என்பது யாவரும் அறிந்ததே.

இச் சீரியர் உலகிற்குப் புரிந்த நலங்கள் பலப்பல. இவற்றுள் இவர் நூல்களினால் செய்த நன்மை, என்றும் அழியாததும் உலகை உய்விப்பதுமாகும். இவர் ஆக்கித்தந்த நூல்கள் ஏறக்குறைய ஐம்பதிருக்கலாம். இவற்றுள் 'இது குறைவுடையது, இது நிறைவுடையது' எனச் செப்புதற் கியலாதமுறையில், யாவும் உயரிய பொருள்களையே தம்முள்கொண்டு, எக்காலத்தவர்க்கும், எந் நாட்டினர்க்கும் பயன்படும் தன்மையில் ஒளிர்வது பெரிதும் போற்றத்தக்கதாகும்.

நம் திருவள்ளுவர் போன்ற தெய்வப்புலவர்க்குப் பின்பு, மங்கையரின் உண்மைப் பண்புகளை உய்த்துணர்ந்து உரைத்த பெருமை—திரு. வி. க.—அவர்களையே சார்ந்ததாகும். ஆயினும், இங்கு இன்னொன்று புகலாமல் செல்ல மனமெழுந்திலது. "பெண்ணின் பெருமை" என்னும் அந் நூலில், அடக்கம், தியா

கம், கற்பு, பொறுமை முதலிய பெண்மைப் பண்புகள் வாய்ந்து, செம்மை நெறியைக் கடைப்பிடித்தொழுகும் பெண் இரத்தினங்களைப் பெரிதும் போற்றுகின்றனர் என்பது உண்மையேயாயினும், இப் பண்புகளை நழுவவிட்டு, வெறும் பெண்ணுருவத்தை மட்டும் தாங்கிநிற்கும் போலிமகளிரை இவர் கடியாமலில்லை; அவர்கள் அலகை இனத்தைச் சார்ந்தவர் என்பதைச் சொல்லாமல் சொல்கிறார். ஆதலின், இவ் வுயரிய நூல், மாண்புடைய மகளிரை ஊக்குதற்கும், அஃதற்றவரைச் செம்மைப் படுத்தற்கும் எழுந்த ஒரு திறவுகோல் என்பதை மக்கள் மறந்துவிடுதல் கூடாது. இச் சான்றோர்க்குப் பெண்ணுலகம் செய்யும் கைம்மாறு யாதோ!

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக இச் சீரியரைப்பற்றி யான் அறிந்துள்ளேன். காலம் நேர்ந்துழி, இவரிடம் அரிய பொருள்களைக் கேட்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருந்தது. இவர், தம் வாழ்க்கைக்குறிப்பு நூலில், ஒன்றும் தெரியாத என்னை, "என்னுடன் பிறந்து வளர்ந்த சகோதரிமார் மூவர்; இப்பொழுது நால்வராயினர்" எனப் பாராட்டியிருக்கும் இவர் சீல குணத்தை என்னென்றியம்புவது! யான் முதல்முதலில் எழுதிய "கோதையார்" என்னும் சிறுநூலை இவர் நோக்கி, என்னை ஊக்கவில்லையேல், இப்போது எழுதியுள்ள சில நூல்களையும் வெளியிடும் மனத்திட்பம் எனக்கு உண்டாயிராது என்பது உண்மை. ஆதலின், இம் முதியோருக்கு என் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

சகோதரர் திரு. வி. க. வின் ஆன்மா இறையடியை அடைந்து அமைதியுறுவதாக. அவர் குடும்பத்தினருக்கு என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உள்ளம்

எண்ணுவது எது? உள்ளம். உள்ளம் தானே எண்ணாது. அதற்குத் துணைக்கருவி வேண்டும். துணைக்கருவி எது? கரணம். உள்ளம் கரணத்துணை கொண்டே பொருளை எண்ணுவதாகிறது. கரணத்துக்கு ஆதாரமாக மற்றக்கருவிகள் நிற்கின்றன. ஆகவே, உள்ளம் ஒன்றை எண்ணுதற்குக் கருவி கரணத்துணை வேண்டிநிற்கிறதென்க.

உள்ளம் பொறிபுலன்களின் தொடர்புகொண்டே காணல் கேட்டல் முதலிய செயல்களை ஆற்றுகிறது.

திரு. வி. க. உள்ளொளி—பக்கம்-கூஎ.

தந்நலமற்ற தமிழ்த்தொண்டர்

[மகாமகோபாத்தியாய பண்டிதமணி. திரு. மு. கதிரேசச் செட்டியார்]

பல்லாண்டு தமிழுக்கு உழைத்த அணிமையில் சிவபதம் அடைந்த திரு. வி. க. அவர்களைப் பல ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழாவில் சிவஞானபோதத்தைப்பற்றிச் சொற்பொழிவு செய்யுங்கால் முதலிற்கண்டதுண்டு. அவர்களுக்குச் சிறந்த தமிழ்இலக்கிய அறிவும் சைவசித்தாந்த நூற்பயிற்சியும், உலகியல் அனுபவமும் உண்டு. படிப்பவர் கேட்பவர்களின் கருத்தைத் தம் வயப்படுத்தும் எழுத்து நடையும், பேச்சுவன்மையும் உடையவர்கள். சமயநோக்கத்தில் சமரசக் கருத்துடையவராயினும் சைவப்பற்று சிறப்பாக இவர்களிடத்தில் இருந்தது. யாரோடும் இகலின்றி அன்போடு பழகும் குணமுடையவர். தம் கல்வியின் பயனாகத் தமிழ்நாட்டு ஏழைகளாகிய தொழிலாளர் நலங்களைப் பாதுகாப்பதில் இடையறாது உழைத்து வந்தார். அதனால் தமிழுலகம் எய்திய பயன் மிகவாகும். இந்த நூற்றாண்டில் பலவகையாலும் தமிழ்நாட்டிற்கு அருந்தொண்டு ஆற்றியவர்களுள் இவர் தலைசிறந்தவர் என்னலாம். தம் தொண்டின் குறிக்கோள் ஏழைமக்கள் நலங்குறித்தேயன்றித் தந்நலம் குறித்ததன்று. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்று இவரைக் கூறுவது முற்றிலும் உண்மையாகும். நல்லொழுக்கமும் குணங்களும் நிரம்பப்பெற்ற திரு. வி. க. அவர்கள், தம் அரிய கருத்துக்களைப் புதிய முறையில் தமிழ்நிலத்தார்க்கு உதவியாகும்படி உரைநடையில் பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். தம் வாழ்க்கையில் ஆரவாரம் சிறிதுமின்றி எளிய முறையில் ஒழுகிக் காட்டினவர். நாட்டுநலமும், மொழிநலமும் ஆகிய இவ்விரண்டும் தம் கண்ணெனப் போற்றிப் பேணி வந்தவர். இத்தகைய அரிய பெரிய குணஞ்செயல்களையுடைய திரு. வி. க. அவர்கள் மறைந்தது தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத குறையேயாகும். என் செயலாம்! இறைசெயலை எண்ணி ஆறுதலடைவதேயாம். அவர்கள் நல்லுயிர் அழிவில் இன்பத்தில் ஈடுபட்டு இன்புறுகவென வேண்டுவோமாக.

எங்கள் தந்தை

[திருவாட்டியார் வ பா தாமரைக்கண்ணியம்மையார், சென்னை.]

தமிழில் 'பெண்ணின் பெருமை' என்னும் நூல் இருப்பது போல் உலகமொழிகளில் வேறு எதிலாகிலும் இருக்கிறதா என எவ்வளவோ ஆராய்ந்து பார்த்தேன். தெரிந்தவர்களையும் கேட்டுப் பார்த்தேன் ஒருவராவது உண்டு என்று சொல்லவில்லை. வள்ளுவர் பெருந்தகைகூட, 'பெண்ணிற் பெருந் தக்க யாவுள?' எனக் கேள்வி கேட்டு, பெண்ணின் பெருமை கூற வந்தவர்போல் நடித்து, பெண்ணின்மீது எவ்வளவோ பொறுப்புக்களைச் சுமத்திவிட்டுச் சென்றார். இத்தகைய மகத்தான பொறுப்புக்களை ஆண்மீது அவர் சுமத்தவில்லை யென்பது அறிஞர்களின் நினைவிலிருக்கவேண்டும். வள்ளுவரே கைவிட்டால், மற்றவர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா? பேதை, பேய், மோகினிப் பிசாசு, பாவத்தின் உருவம், ஆசைக்கொள்கலம், ஒழிந்த பிறவி என்றெல்லாம் பெண்ணை அடித்து நொறுக்கி விட்டார்கள்.

இவ்வாறு யுகயுகாந்தரங்களாக ஏறிவந்த மாசினைப்போக்கி, பெண்உருவத்தைத் துப்புரவுபண்ணி, மெருகிட்டு, ஒப்பனை செய்து அதை ஒரு மணிமண்டபத்தின் நாப்பண் கொலுவீற்றிருக்கச்செய்த பெருமை எங்கள் தந்தை திரு வி. க. ஒருவருக்கே உரியதாகும். இவ்வொரு செய்கைக்காகவே உலகத்துப் பெண்குலம் இப் பெரியாருக்கு என்றென்றும் கடமைப்பட்டதாகும்.

அஃறிணை உலகம்

அஃறிணை உலகைச் சிறிது நோக்குவோம். காலைவானில் ஒரு பெரும் செந்தாமரை; மாலைவானில் ஒரு பெரும் வெண்தாமரை; செறிந்த முத்துப்பூக்கள்; ஒளிவழி; வானவிதானம்—மறிகடல்; மரகத வயல், கருங்காடு, சாந்தமலை—ஞாயிற்றின் வெப்பம்; கடல் ஆவி; மேக எழுச்சி; மழைப் பொழிவு; அருவி வீழ்ச்சி; ஆற்றோட்டம்; கடற் கலப்பு—அன்னத்துயில்; கன்று; வண்டிசை; குயில் பாடல்; மயில் ஆடல்—சுறு நெளிவு; காளை எக்காளம்; பாம்புப்பணம், மான் மருட்சி; புலிப்பாய்ச்சல்; குரங்கு குலா—அஃறிணையின் அமைதி என்னே! என்னே!

திரு. வி. க. பரம்பொருள் அல்லது வாழ்க்கைவழி—பக்கம்-ரு.

இரங்கலுரைகள்

திரு. வி. க. அவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரிதாம். உரைநடை, செய்யுள், ஆராய்ச்சி, உரைவளம், தத்துவம் ஆகிய பலவகையான நூல்கள் அவர் இயற்றினர்.

பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம் ஏ., தாம்பரம்.

இருபது முப்பதாண்டுகட்கு முன் ஆங்கிலேயர் ஆட்சி செழித்துப் படர்ந்திருந்த காலம் அப்போது திலகர், மகாத்துமா முதலான தியாகிகள் நாட்டின் விடுதலைக்காக மூலை முடுக்குகளிலெல்லாம் விடுதலை முழக்கம் செய்தனர். அந்த முழக்கம் திரு வி. க. அவர்களின் காதில் ஒலித்தது அவரும் விடுதலைப் போர்க்கோலம் பூண்டார் தூய செந்தமிழில், உணர்ச்சி கொழிக்கும் சொல்லால் விடுதலை வேட்கையைத் தமிழ் மக்களுக்கு உண்டாக்கினர். அப்போது இம் என்றால் இங்குள்ள சிறை அம் என்றால் அந்தமான் சிறை. இவையே விடுதலை வீரர்களுக்கு விருந்து மாளிகைகள் இத்தகைய அடக்கு முறைக்கு அஞ்சாமல் நாட்டின் விடுதலைக்கு அவர் போராடினர். வார இதழாகிய 'நவசக்தி'யால் நாட்டில் நவசக்தியை ஊட்டினர்.

வித்துவான் இ மு. ஆறுமுக செட்டியார், தியாகராயர் உயர்நிலைப்பள்ளி.

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்; உள்ளத்துறவு பூண்ட உத்தமர், பெண்ணினத்திற்குப் பெருமையளித்த பேரறிஞர்; எளிய வாழ்க்கையில் ஏற்றங்கண்ட ஏந்தல்; ஏழையின் நண்பர்; கற்றுணர்ந்தடங்கிய கவிஞர்; அன்னாரது ஊனக்கண் மறையி னும் ஞானக்கண் இறுதிவரை ஒளிவீசியது.

இராஜாமணியம்மையார், எம்.ஏ மேரியரசி கல்லூரி.

தமிழ்ப்பெரியார் திரு. வி. க. ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகள் தமிழன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியார் ஆவர். இவர் முதல்தர எழுத்தாளர்; இனிய-எளிய செந்தமிழ் நடை எழுதுவதில் இணையற்றவர்; அங்ஙனமே பேசுவதிலும் பெயர் பெற்றவர்; தொழிலாளர் தலைவர்; எச்சமயத்தாரும் பாராட்டத்தக்க பொதுநோக்குடைய சமய அறிஞர்.

டாக்டர் எம். இராசமாணிக்கம், எம் ஏ., எல்.டி., எம்.ஓ எல்., பி.எச் டி.

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைத் தொலைப்பதற் காகவே கலியாணசுந்தரனர் அரும்பாடுபட்டார். தாம் மாதோடு

கூடியிருப்பின் பெண்களைப்பற்றித் தாழ்வான எண்ணம எங்கு தோன்றிவிடுகிறதோ என்னும் அசசததினாலதான் அவா கமலாமபிகை என்னும் மனைவியை இழநதபினனும் மறுமணஞ் செய்துகொளளாது உறுதியுடன இருநதாா.

சு. அ. இராமசாமிப் புலவர்.

இவாது வாழ்த்து என்றென்றும தமிழகததை உய்விககும் என்பதை யறிநதுள்ளேன. இபபெரியாருக்குத் தமிழகம தன கடமையைச செய்யாது விட்டது இனறு பண்பாளர்களது உளளததில கலக்கமெனும புயலவீச, ஆனறவிநதடங்கிய அப பெரியாரை இழந்து நிறகினறோம இவருககு ஆட்சிப பீடங களும், மககளனைவரும தததம கடமையைச் செலுத்தி நன்றி மறவாதவாகளாக வேண்டும்.

இராமசாமி அடிகளார், திருபபேரூா.

திரு வி. க அவர்களின் பிரிவு பொதுவாக நம நாட்டுக் கும், சிறபபாகத தமிழமொழிக்கும, தொழிலாளாகளுககும பேரிழப்பாகும. திரு. வி. க அவர்கள் நாட்டிற்கும மொழிக கும பலவகைகளில பெருநதொண்டு செய்தவாகள, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளா, எலலோரும இன்புற்றிருககவேண் டும என்னும பரநத உள்ளம உடையவாகள.

பண்டித வித்துவான் லெ ப. கரு. இராமநாதன் செட்டியார், சிதம்பரம.

எபபொருளாயினும எபபாலவாக்கும இனியப் பேச வல்லவராக, ஈடும் எடுபபுமற்ற நிலையில இலங்கினார். அவர்தம மூசசும பேசசும் தொண்டேயாகும ஔவை மூதாட்டியாரது வாக்கின்படி 'இதொண்டாதம பெருமை சொலலவும அரிதே' என்று கூறுதலே பொருநதுவதாகும.

சி. இராமலிங்கம், எம் ஏ, அண்ணாமலைநகா.

"ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்" என்று கூறியது, இருபதாம நூற்றாண்டுத திரு. வி. க வை உள்ளிருத தியே என எண்ணுமாறு வாழ்நத ஓா இல்லறத துறவி அவர்; அவா மறைநதாா; அவர் வாய்மலாந்த அருங்கருததுக்கள், அவர் நூலில் இறவாது நிலவுகின்றன; அவறறைப பொனனே போல் போறறி வளர்த்து, அவற்றின் ஊடே அவரைக் கண்டு, அவர் காட்டும் வழி சென்று வாழ்க நம தமிழகம.

புலவர் கோவிந்தன், எம்.ஏ, திருவத்திபுரம்.

இறப்பு என்பது இயற்கை. "பிறந்தன இறக்கும்" என் பது ஞானமொழி. அதுபற்றி வருந்துதற்கு இல்லை. ஆயினும், தொழிலாளர் இயக்கத்தை, பெண் நல உரிமையை, சமயப்

புரட்சியை எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தாம் மேற்கொண்டதைச் சாதித்து நடத்துபவர் யார் என்பதே மக்கள்—தமிழ்மக்கள் மனத்தை அசைத்துக்கொண்டிருக்கிறது.

சித்தாந்த பிரசங்காமிர்தம் பூ. சமாபுரி முதலியார்

அவர் தம்முடைய மனைவியும் அருமைப் புதல்வனும் இறந்தபின், உடல், பொருள், ஆவி மூன்றினையும் தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ்மக்களுக்கும் அர்ப்பணம் செய்து துறவியைப்போல் வாழ்ந்து வந்தார். இத்தகைய பெரியார் இவ்வுலகை நீத்துச்சென்றது தமிழ்நாட்டுக்கு ஒரு பேர் இழப்பேயாகும். அன்னார் எழுதியும் பேசியும் வந்த நீதிஉரைகளைப் பின்பற்றி நடப்பதே தமிழ்மக்கள் அன்னாருக்குச் செய்யும் கைம்மாறு ஆகும். அவருடைய ஆன்மா சாந்தி உறுவதாக.

திருமந்திரமணி அ. சிதம்பரனார்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பது திரு. வி. க. அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோள். இக் குறிக்கோளைச் சிந்தை, சொல், செயல் மூன்றினாலும் கடைப்பிடித்த உண்மை அறிஞர், பேரருளாளர் ஒருவர், தமிழகத்தில் உண்டென்றால் அவர் திரு. வி. க. வே

—பெரியகுளம் வித்துவான் வி. சிவக்கொழுந்து.

திரு. வி. க. அவர்கள் மறையினும், ஒரு கருத்தினை உடன்பாட்டு வினையிலோ, எதிர்மறை வினையிலோ மும்முறை கூறும் கூற்றொலியும், கண்ணிமைத்தலும் என் மனத்தினின்றும் என்றும் அகலா.

ஆ. சிவலிங்கனார், மயிலம்.

எங்கள் முருகன் செந்தமிழ்க்கழகத்தின் சார்பாக, 21-9-53 திங்கள் பிற்பகல் 3-மணிக்கு மயிலம் தமிழ்க் கல்லூரியில், தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் மறைவைக் குறித்து, கல்லூரித் தலைவர் உயர் திரு. S. துரைசாமி ஐயர் அவர்களின் தலைமையில் ஓர் இரங்கற்கூட்டம் நடைபெற்றது.

பெ. சுந்தரமூர்த்தி, கழகச் செயலாளன்.

பெரியார் திரு. வி. க. அவர்களுடைய உள்ளொளியின் ஊற்றத்தால் அவர்களுடைய அழகிய ஆணித்தரமான சொல்லடுக்குகள் ஓர் உரம்பெற்றுக் கேட்பவர் நெஞ்சிலும் படிப்பவர் மனத்திலும் நன்கு பதிந்து நல்ல பயனைத் தந்தன. அவர்களுடைய உரைநடை நெருப்புப்போன்ற தூய்மையுடையதாய், இனிதாய், எளிதாய், எழிலுடையதாய்ப் பிறமொழிக் கலப்பின்றி உள்ளத்தை ஊடுருவும் ஆற்றலுடையதாய்த் திகழ்

கிறது. அவர்கள் இளமைக் காலத்தில் தமிழ்நாட்டில் காங்கிரசுக்கட்சி பலமுறுவதற்கும் காந்தீயம் வலுப்பெறுவதற்கும் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். பார்ப்பதற்குப் பழமை கலந்தவர்களாய்த் தோன்றினும் அவர்களுடைய கருத்துக்களும் கொள்கைகளும் புத்தம் புதியனவாய், இக்கால இளைஞர் உள்ளத்தைக் கவர்வனவாய் இருந்தன அவர்கள் முருகன் திருவடி கலந்துவிட்டார்கள். மறு பிறப்பு உளதேல், பெண்ணாகத் தான் பிறப்பார்கள் பெண்மையைப் பெருமை செய்வார்கள்.

வித்துவான். கோ. சுப்பிரமணிய பிள்ளை

1939-ம் ஆண்டு ஒருநாள் நல்லநாள்; நன்மையை என் வாழ்வில் நாட்டிய நாளுங்கூட. தென்காசி என்றாலே சிவநாடியைச் சீர்செய்யும் காசி நம் உடல், பொருள், ஆவி மூன்றையுமே ஒன்றாக்கும் காசி.

அன்று நடந்தது ஆன்றோர் கூட்டம். எதன்பொருட்டு? தமிழ்ப் பெருந் தெய்வமாம் வள்ளுவனாரின் வாய்மொழியைப் போற்ற, வல்லவாறு கூட்டப்பட்ட மாண்புறு மாநாடு அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கவே தமிழ்த்தரு மேலோராம் திரு. வி. க அவர்கள் வரவேற்கப்பட்டார். அவ்வமயம் அரும் பெரும் தலைவர்மணியின்கீழ், எளியேற்கும் உரைவழங்கும் பணியொன்றும் போடப்பட்டிருந்தது

அப் பணியும் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தில் மூன்று நாள் தொடர்ந்து நடைபெற்றது அதுபோது அடியேற்கும் அம்மூன்று நாட்களும் அரும் பெரும் மணியுடன் கலந்து வாழும் பெரும் பேறும் கிடைத்தது.

வித்துவான் பொன். சுப்பிரமணிய பிள்ளை.

தமிழ்நாட்டிலே யன்றி இப் பூவுலகின்கண்ணே இவரையறியாதார் ஒருவருமிலர். அமைதி, அன்பு, அருள், அறன், தியாகம், சமுதாயத் தொண்டு என்பதான பல உயரிய நற்பண்புகளைக்கொண்டு தோன்றியவர் இவர் ஒருவரே எனலாம்

M A. சுப்பிரமணிய முதலியார்.

அறிவிற் சிறந்த பெரியார் திரு வி. க. அவர்களைச் சுமார் நாற்பது ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவருடைய நல்லறிவும் சொல்லாற்றலும் யாவரையும் வசப்படுத்தும் தன்மையன. இவருடைய வாக்கே வாக்கு என்று யாவரும் வியக்கத் தக்க பண்புகள் இவர் பேச்சிற் பொலிந்தன. இவர் பேசும் ஆற்றலையும் பேச்சின் அழகையும் கண்டு வியந்து முன்னரே

'வாக்குக் கருணகிரி வாதவூரார் கனிவில்' என்னும் ஆன்றோர் வாக்கைத் தழுவி,

'வாக்குக்கு ஞானியார் மற்றுந் திரு வி. க
தேக்குந் தெளிவுகருச் சேதுபிள்ளை—நோக்குக்குக்
கோதண்டபாணி பிள்ளை கூற்றிதனுக் கையமில்லை
ஈதுண்மை உண்மையுண்மையே''

என ஒரு பாடல் அமைத்தேன். பிரமன் தந்த திரு வி. க. வின் வெற்றுடம்பு மாய்ந்து மறைந்தது; ஆனால் அவர் இந்த அவனியிற் புகழ்கொண்டு செய்த உடம்பு மறையாது, மறையாது என்றும் மறையாது.

தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

தமிழகத்தின் பேராண்மை மிக்க தவப்புதல்வர் மறைந்துவிட்டார். அந்திய காலத்தில் ஆதரவற்று, தமது இல்லத்தினின்றும் விலக்கப்பட்டு, கிறித்துவ நண்பர்களால், ஆதரவு செய்யப்பட்டு உயிர் துறந்தார். சைவமக்களாவது, தமிழ்ப் பேரன்பர்களாவது அவருடைய அந்திய காலத்தைச் சிறிதளவேயாயினும் மன அமைதியுடன் போக்க முன்வந்தாரில்லை. இது தமிழ்மக்கள் செய்த துர்ப்பாக்கியம். இனி, அவருக்கு மண்டபம் கட்டுவதிலும் ஞாபகச் சின்னங்கள் எழுப்புவதிலும் அவர் ஆன்மா சந்தோஷப்படப் போவதில்லை.

ஜே. எம். சோமசுந்தரம்.

தமிழ்த் திருமகனாராகிய நம் கல்யாணசுந்தரனார் "தமிழறியோம்" என முன்னர்த் தற்பெருமை பேசிய மாக்கள், அந்தோ! யாம், இத்தகைய இனிமை கெழுமிய தாய்மொழியைக் கற்றிலோமே" என நாணித் தலைகவிழும்படியும், ஆ! தமிழ் இத்துணை இன்பமுடையதோ! ஆயின் யாமும் அதனைக் கற்போம்; எம் மக்களையும் தமிழ் கற்கச்செய்வோம்," என இத்தமிழ்நாடு முழுதும் விழிப்புற்றுத் தமிழ்மொழி கற்கும்படியும், நாடு முழுதும் சென்று ஆங்காங்கே அரங்கங்களிலே ஆற்றிய தெளிதமிழ்ச் சொற்பொழிவாலும், முருகன், பெண்ணின் பெருமை முதலிய தம்இனிய நூல்களாலும், தெய்வத்தமிழின் சிறப்பனைத்தும் தமிழ்நாடுணரும்படி செய்து தமிழ்மக்களை தமிழ்த்தாயிடம் ஆற்றுப்படுத்தியவராவார்.

புலவர் பொ. வே. சோமசுந்தரனார்.

ஒவ்வொரு தலைவரிடத்தும் ஒவ்வோர் தனிப்பண்பு தலைசிறந்து காணப்படும். அவ்வகையில் நம்மருமைத் திரு. வி. க. அவர்களிடங் காணப்பட்ட தலைசிறந்த பண்பு "அன்பு" ஆகும். அவரை நெருங்கி அறிந்தாரெல்லாரும் இவ்வுண்மையை ஒப்புக்

கொள்வர். உயர்பண்பாடுகள் யாவற்றிற்கும உயிரான அன்புப் பண்பு நிறைந்திருந்த அவர்கள்பால் ஏனைய உயர்பண்புகளெல்லாம் அமைந்திருத்தல் இயல்புதானே! ஆதலின் திரு. வி. க. அவர்களின் புலமை, தொண்டு, கோட்பாடுகள், செயல்கள், வாழ்க்கை யாவும சுவாச்சியான அன்பு நெறியில் அமைந்தனவே.

வித்துவான் மறை திருநாவுக்கரசு.

தம் வாழ்வின் குறிக்கோளை இலக்கியமாகக்கொண்டு அதன்மூலம் மக்கள்சமுதாயத்தை உயர்நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டாரன்றோ! தமிழ்நாட்டிலே கவிமழை பொழிந்து, புவி மன்னனை எதிர்த்து நாட்டைவிட்டு வெளியேறிய கவிமன்னன் கம்பனையும், தன் உள்ளத்தில் தோன்றிய உண்மையை நிலைநாட்ட "பெண்டிரின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை" என்று கூறி இறைவனோடு வாதாடி, நெற்றிக்கண்ணுக்கும், நெஞ்சுக் கண்ணுக்கும் அஞ்சாத நக்கீரன் போன்ற கவிவீரர்களைக் கதைகள் மூலம்தான் கண்டிருக்கிறோம். ஆனால் மாசற்ற கன்னித் தமிழ்மொழி வளரப் பிறமொழி வேண்டுவதில்லை. அதனால் தமிழ் கெட்டுவிடும்" என்று பல மகாநாடுகளின் மூலமும், சொற்பொழிவு, கவிதை, கட்டுரை மூலமும் விளக்கித் தள்ளாத வயதில்கூடத் தொண்டாற்றித் தமிழைக்காத்த பெருமை நம் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களையே சாரும்

K நாகரத்தினம், பேரூர் (கோவை)

திரு. வி. க என்று உச்சரித்தாலே தமிழனுக்கு உடல் சிலிர்க்கும்—உள்ளம் பூரிக்கும். அவருடைய இன்முகமும், இனிய பேச்சும, குழந்தை மனமும, விருந்தோம்பலும் எண்ணி எண்ணி உவகை அடைவதொன்றாய் உள்ளது திரு. வி. க. என்றால் தமிழ்ப்பெரியார், சைவசித்தாந்தி, கிறிஸ்துவத்திலே சைவம், புத்தமதத்திலே சைவம், வைணவத்திலே சைவம், மார்க்ஸ்கொள்கையிலே சைவம், இப்படி எத்துறையிலும் புகுந்து அவ்வத் துறையில் உள்ள அடிப்படைச் சித்தாந்தங்களையும்—சைவசித்தாந்த அடிப்படைத் தத்துவங்களையும ஒற்றுமைப்படுத்தி மக்கள் மனத்திலே சமரசசன்மார்க்க வித்தினைப் பதியவைத்த பெரியார்.

சிறுவை. மோகனசுந்தரம், அமைச்சா, நக்கீரர் கழகம்.

நம் தமிழ்நாட்டின் தந்தை திரு. வி. க. ஒப்புடையர் அல்லர். இவர் நல்வினைப்பயன் உள்ளவர் என்பது இவர் ஆற்றிய செயலினின்றும் நன்கு விளங்குகின்றது.

மயிலை - சீ. வேதாசல முதலியார்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் அருகிருந்து அறிவுரை கேட்கும் பேறுபெற்றவர்களுள் யானும் ஒருவன். வேறு கூறுவானேன்; மறைந்த பெரியார் செந்தண்மை பூண்ட அந்தணர் வேந்தன். அவர் காட்டிய நெறிநிற்கும் உள்ளம் நம்பால் மலர்வதாக.

ம. இராசமாணிக்கம்.

உலகம் ஒரு பல்கலைக்கழகம். அதில் அனுபவம் என்னும் கல்வியைக் கற்றுத் தேர்ந்து கல்விமானென்றும் கலைஞரென்றும், அறிஞர் என்றும் அன்பரென்றும், பாவலரென்றும் நாவலரென்றும், வீரரென்றும் தீரரென்றும், வள்ளலென்றும் மற்றும பல சீரும் சிறப்பும் பெற்றோர் பலர். ஆனால், மனிதராக வாழ்ந்து—மனிதன் ஆற்றவேண்டிய கடமைகளை ஆற்றி—வள்ளுவர்கண்ட மனித இலக்கணத்துக்கு உரியவராகி—மனித உள்ளங்களில் குடியிருந்து—அவற்றின் உணர்ச்சிகளில் இரண்டறக்கலந்து—முடிவில் அம்மனித இனத்தின் கண்ணீரிலே கரைந்து மறைந்தவர் மிகச் சிலரே. அத்தகைய தெள்ளியரில் நமது அண்ணல் திரு. வி. க. வும் ஒருவராவர். சுருங்கச் சொல்லவேண்டுமானால் அன்பர் திரு. வி. க. வின் மறைவால் இந்நாடு ஒரு நல்லாரை இழந்துவிட்டது—உண்மை மனிதரை இழந்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

நாகை. த. சிங்காரவேலன்.

உலக ஒற்றுமைக்காகப் பாடுபட்டுவரும் பெரியார்களுள் ஒருவர் நம் திரு. வி. க. பிளவு மனப்பான்மையை அவர் அறவே வெறுப்பவர்; அமைதிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்கியவர்; இயற்கையழகில் இறைவனைக் கண்டு வழிபட்டவர்; பெண்ணின் தாய்மைப் பண்பினைப் பாராட்டுதற்கு நம் பெரியாரினும் சிறந்தாரை நான் கண்டிலேன். நம் பெரியாரின் கனிவு மொழி கேளாத கழகங்கள் இல்லை. நம் பெரியார் உரைநடையில் கவிநயம் காட்டியவர்; காவியத்திலே ஓவியம் தீட்டியவர்; திருவள்ளுவத்தைத் தம் வாழ்க்கைத் துணையாகக் கொண்டவர். அவர்தம். பிரிவு தமிழர்கட்குத் தாங்கொணாத் துன்பினைத் தருவது.

மயிலை சிவ. முத்து, சென்னை.

சொல்வல்ல இனிய நாவான்

[புலவர்—'அரசு']

காலமெனுங் கொடுங்கூற்றே! அறக்கொடுமை எமக்கிழைத்த
கருத்துத் தேறேம்!
ஞாலமெலாம் புகழ்விரித்த தமிழ்க்கதிரைத் தொழிலாளர்
நல்ல வாழ்வைச்
சீலமெலாம் வளர்த்திட்ட பெருந்தகையைப் புலவரின்பத்
தென்றல் தன்னை
ஓலமிட்டு யாம்வாடப் பிரித்தனை! நின் செயல்தீமை
ஒன்றோ! ஒன்றோ!! (௧)

செந்தமிழில் அரசியலைச் செப்பவொண்ணா தென்றோரைத்
திகைக்கச் செய்தே
எந்தவிய லுந்தமிழில் இசைத்திடலாம் எனக்காட்டும்
ஏந்தல் தன்னைச்
செந்தமிழ்த்தாய் மனங்களிப்பப் பலகலனும் புனைந்துமகிழ்
செம்மல் தன்னை
எந்தமக்கோர் நெறிகாட்டும் கலியாண சுந்தரனை
யிழந்தோம்; அந்தோ! (௨)

உடல்முதுமை யுற்றாலும் உளமும்உரை யும்முதிரா
உரவோன் தன்னை
அடலரியே றெனமுழங்கித் தொழிலாளர்க் குழைத்திட்ட
அண்ணல் தன்னைக்
கடனறியாத் தமிழருளக் கசடறுத்துச் சோம்பகற்றுங்
காட்சி யானை
இடனகன்ற தமிழ்நாடின் றிழந்திட்ட தீயூழை
யென்னென் போமே! (௩)

இலக்கியநன் னடையாலே தமிழ்மொழிக்கு நவசக்தி
யிணைத்தான் முன்னாள்!
துலக்கியசெந் தமிழ்மழையாற் பேரவையாம் பயிர்வளர்த்தான்!
தூய சைவம்
இலக்கமுறச் சமரசமாம் அணிபுனைந்தான்! சொல்வல்ல
இனிய நாவான்!
கலக்கமுற்றே யாம்வாட இன்றந்தோ கைநெகிழ்ந்தான்!
காலம்! காலம்!! (௪)

இனியதமிழ்த் தென்றலாய்த் தமிழ்ப் பொழிலாய்ப் பொதுநெறியாய்
இலகி நின்றான்!
தனியுயர்ந்த இமயமலை யிலக்காகும் முருகனடி
தாழும் அன்பன்
முனிவறியாப் பெருமுனிவன்! பெண்ணுரிமை யறிவித்த
முன்னோனே! முன்னி
மனிதவாழ்க் கையையளித்தானே! தேசபக்தன் ஆகிநின்றான்!
மறைந்தான் அந்தோ! (௫)

காந்தியமார்க் கியமறிந்தான்! வாழ்விலதைக் கடைப்பிடித்தான்
காலமெல்லாம்
மாந்தருக்கே உழைத்திட்டான்! தன்னலத்தை வெறுத்திட்டான்!
மாணவர்க்கும்
ஆர்ந்தகவாய்த் தமிழ்நூல்கள் யாத்திட்டான்! தமிழருள்ளத்
தமர்ந்திருக்கும்
ஏந்தலவன் பிரிவாலே தமிழ்நாடு பொலிவிழந்த
தென்னென் பேமே! (௬)

தொழிலாளர் தலைவனென்கோ? தமிழ்ப்புலவ ரேறென்கோ!
தூய்மை சார்ந்த
வழியமைந்த பலசமயக் குரவனென்கோ? அரசியலின்
மன்னனென்கோ?
எழிலாரும் பேரவைநா வலனென்கோ? எழுத்தாளர்
ஏந்தலென்கோ?
பழியறியா நடையுடையான் கலியாண சுந்தரனைப்
பகர்வ தென்னே! (௭)

நின்னுடைய தமிழ்க்காதல் நிலையத்தில் விளைந்திட்ட
நிகரான நூல்கள்
மன்னுறஇத் தமிழ்நாட்டில் தமிழறிந்தோ ருள்ளத்தே
வாழ்வுற் றோங்கும்!
பொன்னுடையார் நட்பிருந்தும் பொன்விழையாப் பண்பாள!
புகல்வ தென்னோ?
மன்னிய நின்வாழ்வினிலே வறுமையொடு செம்மையென்றும்
மன்னல் கண்டோம்! (௮)

புன்னகைசேர் மலர்முகமும் பொருள்நகைசேர் மணிமொழியும்
புகரில் காட்சி
மன்னியபுண் ணியவுருவுங் கண்டுகளித் தார்வமிக
வாழ்த்துக் கூறும

துன்னியபே ரறிஞர்நிறை பேரவையில் தலைமைபெறுந்
தோன்றலே! நின்
இன்னிசை மெய்ம் மொழிகேட்ப தினியெங்கே? மணவழகே!
என்னே! என்னே!! (௯)

ஆயிரத்தெண் ணூற்றெண்ப தொடுமூன்றாம் ஆண்டினிலே
ஆகஸ்டுற்ற
மேயஇரு பத்தாறாம் நாளில்விருத் தாசலப்போ
மேலோன செய்த
தூயதவப் பயனாலே சின்னம்மை பெற்றெடுத்த
தோன்றலே! நீ
ஆயஎழு பத்தொன்றாம் வயதுமுற்றி இறைவனடி
யடைந்தாய்! மனனே! (௧௦)

ஊனுடலை ஆயிரத்தொள் ளாயிரத்தைம் பதின்மூன்றில்
உறுசெப் டம்பர
தானுடைய பதினேழாம நாளினிலே நீத்தென்றும
தமிழ்ச்சான் றோரின்
மானமிகும உள்ளத்தே புகழுடம்போ டுறைகின்ற
வள்ளால்! நீமன்
வானுலவு பேரின்ப வீட்டினிலே இறைவனடி
நிழலில வாழ்க! (௧௧)

செந்தமிழ்நாட் டுறைகின்ற சீரியரே! திரு. வி. க.
செய்து வந்த
செந்தமிழ்நற் பணிதழைக்கச் செய்திடுவோம! தமிழன்னை
சீர்பெற் றென்றும்
முந்தியநல் லரியணையில் இனிதிருக்க முயன்றிடுவோம!
முற்றச் செய்வோம்!
இந்நறும் பணியாலே திரு. வி. க. மனஅமைதி
எய்து வாரே. (௧௨)

தீந்தமிழ்க் களஞ்சியம் திரு. வி. க!

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

பேரதிர்ச்சி யடைந்திட்டோம்! கலியாண சுந்தர! நின்
பிரிவி னாலே
ஆரதிர்ச்சி யடையாதார்? அருந்தமிழே உருவான
அறிவு வள்ளால்!
காரதிர்ச்சி கொண்டுபெரு மழையென்னும் கண்ணீரை
நினது மேனி
ஊர்வலத்தில் பொழிந்தவொரு விந்தையினை எண்ணிமனம்
உருகி னோமே!

காந்தீயம் மார்க்ஸீயம் இரண்டினையும் தமிழ்த்தேனில்
கலந்து தந்தாய்!
சாந்தியினைச் சமரசசன் மார்க்கத்தைத் தமிழரெலாந்
தழுவ வேண்டிச்
சாந்துணையும் பணியாற்றிக் கட்சிமதத் தடையெல்லாந்
தகர்த்து நின்றாய்!
தீந்தமிழ்நற் களஞ்சியமே! திரு.வி.க! நின்மறைவால்
திகைக்கின் றோமே!

இலக்கியப்பூந் தென்றலினை எல்லார்க்கும் ஈந்துவக்கும்
இன்பங் கண்டோய்!
கலக்கமுறுந் தொழிலாளர் இயக்கத்தைப் புயலாக்கிக்
காத்த வீர!
மலைக்காமல் தமிழுணர்ச்சி மருந்தூட்டி வளமாகத்
தமிழர் உள்ளந்
துலக்கியதோர் கலியாண சுந்தர! நீ மறைந்த துயர்
துடைப்பார் யாரே?

நாட்டிற்கு நல்லதென நீகண்ட எதனிலுமே
நாட்டங் கொண்டு
பாட்டாலும் எழுத்தாலும் பேச்சாலும் மூச்சாலும்
பஞ்சை உள்ளம்
கேட்டறியா உண்மைகளை ஊட்டிமிகப் பேரறிவுக்
கிளர்ச்சி செய்தோய்!
கூட்டுறவு நலவமைதிக் குரலமுதம் இனியாரே
கொடுக்க வல்லார்?

முருகனையே அழகாகக் கண்டதமிழ் முனிவரனே!
பெண்ணினத்தின்
பெருமையினை மாந்தரின உரிமையினைப் பேணும்எழில்
நூல்க ளாக்கித்
தாமுயரும் தமிழ்நடையால் புதியதொரு சகாப்தத்தைச்
சமைத்த நின்றன்
கரமலரை எரியுண்ணக் கண்டந்தோ! கையற்றோம்!
கலங்கி னோமே!

தொழுவதால் உண்டே துணிவு!

[திரு. க. வெள்ளைவாரணன்]

கலி வெண்பா.

பாட்டும் உரையும் பயின்றோன் தமிழ்மக்கள்
வேட்ப விரித்துரைக்கும் வித்தகன்—நாட்டோர்
உரிமைக் குழைத்த உரவோன் தமிழா
பெருமை விளக்கும் பெரியோன்—திரு வி.க.
என்றுலகர் போற்ற இனிய தமிழ்மொழியாந்
தென்றல் அளையுந் திருவாளன்—துன்று
கலியாண சுந்தரப்போ பெற்றுக் கதிர்வேல்
வலியாற் றமிழ்நலத்தை மாந்தி—நலிவகன்றே
ஏழைத் தொழிலாளர் இன்பமுடன் இவ்வுலகில்
வாழ வழிவகுத்த வல்லாளன்—வாழ்வுயரப்
பெண்ணுரிமை பேசிய பீடுடையான் பாரதத்தார்
மண்ணுரிமை பேண வழிகண்ட—அண்ணலார்
காந்தி யடிகள் கருத்தறிந்திந் நாட்டவர்க்கு
வாய்ந்த வுரைகள் வழங்கினான்—சாந்துணைய
துன்ப முறினுந் துளங்காத சிந்தையினான்
அன்பே உருவாம அழகுடையான்—முன்பு
நெருங்கிப் பழகியவா நீரலசெய் தாலும்
வருத்திப புறனுரையா மாண்பிற்—றிருந்தி
உலகியல்வாழ் வோங்க உயர்ந்தபே ருண்மை
பலவும் பகர்ந்த பழையோன்—இலகு
பெருங்குணங்கட் கெல்லாமோர் பேழையென இந்நாள்
திருந்து தவநெறியிற் சேர்ந்தோன்—பொருந்தும்
இருளில் ஒளிகண்ட எந்தல் அருளே
பொருளென் றுணர்ந்த புனிதன்—தெருளா
உடல்வாட்ட முற்றாலும் உள்ளம் இளையா
அடலே றெனத்திகழ்ந்த அண்ணல்—சுடரார்
இராமலிங்கர் போற்றும எழிலார்சன் மார்க்கம்
பரவ வழிகண்ட பண்பன்—உரையினால்
தூய தமிழ்வளர்த்த தோன்றல் இளமைவளர்
சேயின் அடிமறவாச சிந்தையினான்—தாய்போல்
இளைஞர்களைக் கண்டால் இனியவுரை பேசி
வளமைபெற ஊக்கும் மதியான்—கிளைவளரச்
செந்தமிழ ரொற்றுமையாற் சோர்ந்துயர வேண்டுமெனச்
சிந்தையினில் வேட்கை சிறந்துடையான்—சிந்தையிற்
கண்ட கனவு நனவாகா முன்னரவன்
விண்படர்ந்தா னென்றுரைக்கும் வெவ்வுரையாற்—கண்கள்
கலங்குகின்றார் செந்தமிழர் கண்ணீரை மாற்றி
நலம்புரித லன்றியே நாளும்—புலம்பி
அழுவதால் என்னே? அவன்பே ரறத்தால்
தொழுவதால் உண்டே துணிவு.

இரங்கற்பாக்கள்

தமிழ்ப் பெரியார்

தமிழ்ப்பெரியார்! இந்தியத்தாய் தந்த தவப் பெரும்புதல்வர்
தக்கார் போற்றும்
அமிழ்தமென இனிதுரைக்கும் ஆற்றலுயா பெருஞ்சான்றோர்!
ஆண்மை யுள்ளம்
இம்மியளவும் மாறாமல் என்றென்றும் மக்களுயிர்
வாழவே எண்ணி
இமிழ்கடல்சூழ் வையமதில் எளிமையுடன் தூய்மையினை
எடுத்துக் கொண்டார்.

—புலவர் தில்லை. தா. அழுதவேலனார்.

திரு. வி. க. செம்மல்!

பெண்ணின் பெருமை விண்ணுறப் புகன்றவன்
கண்ணெனப் பலரும் கருதிடும் பெரியவன்
புண்ணியம் இதுவெனப் பொதுநெறி உரைத்தவன்
திண்ணிய திரு வி.க என்னும்பேர்ச் செம்மலே!

—R. இராசரத்தினம், எம்.ஏ., எல்.டி., சென்னை.

அறந்திறம்பாத் திரு. வி. க.

அன்புகனி தமிழ்க்கடலே! அறம்பொழியும் வான்முகிலே!
இன்புநிறை கலியாண சுந்தரனும் எம்பெரியோய்!
துன்புசெறி மண்ணுலகில் தொண்டுபல நீசெய்து
பின்புபெருந் தொண்டாற்றப் பிறக்கவுல கேகினையோ!

தண்ணாரும் தமிழ்பிலிற்றும் தனிநாவின் திறனெங்கே?
கண்ணாரும் கடனாற்றக் கடுகவிரை காலெங்கே?
எண்ணாரும் ஏதந்தடுப்ப இசைமைநிறை நூல்எழுதும்
பண்ணாரும் திருக்கையின் பணியெங்கே? எங்கேயோ!

அறந்திறம்பாத திரு.வி.க. அரியவுயிர் இறையடியின்
திறஞ்செறிந்த சேவடி மலர்த்தேனுண் டின்புறுக
மறனறியா மாநிலத்து வளங்கள்பெற அவர்கண்ட
பெறலரிய வழிநடந்து பெருந்திருவம் ஆகுவமால்.

—செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளை.

கைலைமலை சென்றாயோ?

ஒலியாரும் கடல்சூழும் உலகினிலே பிறந்தவர்கள்
எலியாகித் தொழில்செய்து இறந்தொழிந்து போனார்கள்
மலியாணர் தொண்டுகளை மட்டின்றிச் செய்துநின்ற
கலியாண சுந்தர! நீ கைலைமலை சென்றாயோ?

—சு. அ. இராமசாமிப்புலவர்.

தமிழ்ஞாயிறு மறைந்தது !

எந்தை திரு.வி.க. ஈசனடி சேர்ந்தாரென்
றிந்த வுலகம் இயம்புமால்—அந்தோ ! கேள் !
ஈசனடி சேர்ந்தார் இவரோ ? இருந்தமிழோ ?
பாச வுலகே பகர் !

—வித்துவான் மீ. பொன். இராமநாதன் செட்டியார்.

அவர் தொண்டே நற்றுணை

பலகலையும் நற்பண்பும் பயிற்றுதவத் தோன்மன்
பாரெல்லாம் கடலணையும் ஆற்றனைக்கொள் வோன்மன்
உலகுபுகழ் பெண்பெருமை முதல்அலகில் நூல்கள்
உதவிஉயக் கொண்டோன்மன் ஒண்காந்தி அடிகள்
நிலவுவழி நின்றோன்மன் நீடுமண அழகன்
நிறைதிரு வி க எனும்பேர் நேயன்மன் முன்னோன்
நலஅடியைச் சார்ந்தோன்மன் நமக்குமவர் தொண்டே
நற்றுணையாம் அவர்தொழுது வாழ்த்தல்வினைப் பாமே.

—கழகப்புலவர் ப. இராமநாத பிள்ளை.

தமிழ்ப் பெரியோன்

திருவார் தமிழின் கடலெழுந்து சிவமாம் சமய ஒளிபரப்பி
உருவார் உலகின் தொழிற்றுறையோர் உலவா இன்பப் பெருக்கெய்த
மருவார் மக்கள் இருளொழித்த மணவழ காரும் மாமதியாம்
செருவார் இல்லாத தமிழ்ப்பெரியோன் சென்ற துலகின் தீவினையே!

தேனும் பாலும் கலந்தெனத் தெவிட்டா தினிக்கும் தெளிநடையில்
வானுங் களிக்கச் சொற்பொழிவு வரையின் இழியும் அருவியென
ஊனும் உருகப் பொழிந்துளத்தின் ஒளியாம் ஒளிநூல் பலவளித்த
ஆனாப் புகழின் கலியாண சுந்தரன் மறைந்த தளியுடைத்தே.

—பேராசிரியர் பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியார்.

ஆக்கங்கண்ட திரு. வி. க.

நடையினில் தோற்றந் தன்னில் நட்பினில் பழகும் வாய்ப்பில்
உடையினில் உளத்தில் என்றும் ஒப்புமை யில்லா வள்ளல்.
படையினில் பகர்ந்து செய்யும் பான்மையில் மேம்பா டுற்ற
அடையினில் ஆக்கம் கண்ட திரு.வி.க. யாண்டுற் றீரோ?

—நாஞ்சில், கா. கணபதி.

நற்பெரியோன் !

செந்தமிழ் மாது செய்த சீர்மிகு தவத்தி னாலே
இந்தநல் உலகம் தன்னில் எழின்மிகு நூல்கள் செய்ய
வந்தநற் பெரியோ னான வளர்கலி யாணப் பேரார்
சுந்தர ! யாண்டு சென்றாய் ? செந்தமிழ் உலகம் விட்டே !

கோமளப்பேட்டை கு. கலியாணசுந்தர முதலியார் என்ற மணவழகன்.

மறைந்தாரோ அவர்?

மறைந்தாரோ மணமீது வாழ்க்கை கொடிதென்
றறைந்தாரோ, இல்லையே, ஆனால்—மறந்தேனும்
விணமீது நலவாழ்வு வேட்டுத் துறந்தாரோ,
நுண்மீன அகத்து நுழைந்து.

வாழ்க்கையிலே பண்மை வளங்கண்டார், மக்கள்நிலை
காக்கையிலே வாழ்வில களைகண்டார்,—கோக்கையிலே
பாவில் கருத்தமைத்துப் பலவுயிரும் செம்மையுற
எவி மொழியமைத்தார் இங்கு.

—கோவை கிழார்.

மாமணியே திரு. வி. க!

செந்தமிழின் நற்கடலே! செய்தவத்தின் மாமலையே!
சிறந்த பண்பு
தந்தவிரும் நற்றுணையே! அறிவுரைகள் தருகருவே!
தக்க சீர்சால்
வந்தவிரும் மாமணியே! திரு.வி.க எனும்பெயர்தான்
வழங்கு மேலோய!
அந்தமிலாப் புகழுடையாய்! மண்ணீத்தாய! இதுமுறையோ?
அந்தோ! அந்தோ!!

—தி. மு. சங்கரலிங்கம்.

சைவத்தின் அருநிதி

செந்தமிழும் சிவநெறியும் சேயமுநல் வாழ்வுபெற
வந்தருளுங் கலியாண சுந்தரனும் வண்மையனே!
நுந்தமரும் பணிவிடுத்து நுங்குமர்க ளழவிடுத்து
எந்தவுல கினிற்சென்று யெம்மருங்குங் காணகிலமே! (க)

அருவியெனப் பொழிசொல்லும் அருந்தமிழின் பொருணலன்கள்
திருவொளிர வுரைதிறனும் சிவமணக்கும் திருமுகமும்
பெருவிறலும் அருந்துறவும் பெண்மைநலன் ஓம்புதலும்
திரு.வி.க நின் பாறகண்டு இசையனைத்தும் புகழ்ந்தனமே! (உ)

நிலைபெறுநல் லுடலமைக்க நிறைமலரோன் நினைந்திலனே!
கலைவலநின் றனைக்காக்கக் கார்வண்ணன் கருதிலனே!
தலைவனென அறிந்துமெம தருமனுனைச் சார்ந்தானே!
அலைகடல்சூ முலகிலுன்போ லாரையுமே காணகிலமே! (௩)

வித்தகநின் புலாலுடம்பு வீழ்கினுநற் புகழுடம்பை
உத்தமநீ கொண்டிடலா லுனைபிரிவா லெந்தமக்கு
உயத்தத்துயர் சிறிதகன்று உளத்தமைதி கொள்கின்றோம்
சித்தனெனப் பதந்தனைச் சிறந்தொளிரும் புலவோனே! (௪)

ஆண்டகையே! சைவத்தின் அருநிதியே! அளப்பரிய
ஈண்டுபுகழ்க் கலியாண சுந்தரனும் எம்நண்ப!
தாண்டவஞ்செய் தம்பிரான் தாணையடிக்கீழ்ப் புக்கொன்றி
மீண்டுவராப் பேரின்ப மேவியென்றும் வாழ்ந்தருளே! (௫)

சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை.

உள்ளங் கலங்கினன்!

என்னருந் தலைவ! என்னருந் தலைவ!
நின்னரும் பிரிவை என்னென் றுரைப்பேன்
கண்ணுதற் கடவுளின் கழலடி கருதும்
எண்ணரும் புகழ்க்கல் யாணசுந் தர!நீ
விண்ணுல குற்றனை விரைவுட னெனுஞ்சொற்
கேட்டன னுள்ளங் கலங்கின னந்தோ!
பெறலருந் திருவாய விளங்கிய பெரியோய!
அருந்தினை தமிழைப் பொருந்திய அமிழ்தென
திருந்திய மனத்துடன் வளர்ந்தனை மனனே!

—நா. சீனிவாச முதலியார்.

உரைநடைப் புலவர்

செந்தமிழ்த்தாய் தவப்புதல்வ! சிறந்தஉரை நடைப்புலவ!
சந்தநடைச செய்யுள்சொலச் சலியாத கலியாண
சுந்தரனே! இந்நிலத் தாயரெலாம உளமவாட
இந்தணியுஞ் சடையிறைவன் இணைமலாத்தாள் கலந்தனையே!

—சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி மாணவர்கள்.

மாணிக்க மாமணி!

செந்தமிழின் களஞ்சியமே! தமிழ்ப்புலவர் தமக்கேறே!
திருவா ரூர்ககண்
மைந்தனென வந்துதித்த மாணிக்க மாமணியே!
மகிழ்கல் யாண
சுந்தரனே! பைந்தமிழ்நாட் டவரெல்லாம் உளம்வாடச்
சிவனா தாளில்
சொந்தமெனக கலந்தனையே! நினபோல உரைநடைநூல்
செயதார் யாரே?

—சுந்தரம், புலவர் வகுப்பு மாணவர், பேரூர்.

இனிப் பெறுவதென்று?

ஒருவிகற்ப மில்லாத உலகத்து மக்கள்தனை
நிருவிகற்ப முறசசெய்த நேர்மைதனை யென்சொல்வேன்
திருவிகற்ப மில்லாத திரு வி.க. உன்பெருமை
கருவிகற்ப முற்றாலும் கணடுகொள்ளும தன்மையதே!

காந்தியம் செழிததோங்கக் கணணியமாம் வழிகாட்டிச
சாந்தமது பெறசசெய்த தமிழ்ப்புலவோய்! சார்ந்தவாதம்
காந்தமடை யுள்ளத்தைக் கனிவுறசசெய் நினனாற்றல்
போந்தவுல கிடையேயும் பொலிவுற்று வாழியரோ!

தமிழறிஞர் கூட்டத்தே தனியொருவன் நீயென்னும்
அமைவுடைய பெயர்பெற்ற அருங்குணத்தோய்! நின்பிரிவால்
தமிழடையும் குறையொன்றோ? தமிழுடையார் குறையொன்றோ?
எமையுடையாய! எம்தலைவா! இனிப்பெறுவ தென்றேயோ!

—வித்துவான் பொன். சுப்பிரமணிய பிள்ளை.

திரு. வி. க. பேச்சோட்டம்

திரு வி.க. திரு வி.க. என்றுபல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்தமிழ் உலகர்
திரு வி.க. ஒருவரு மல்லர்
அருவிகள் தருமொரு மாரியும் உளதே.

திரு.வி.க. பேசசோட்டச் சீரழகின் முன்னர்
அருவிகாள்! உம்மோட்ட ஆற்றல்—ஒருவிதத்தும்
நேராகா தன்னூர் நிகழ்த்துரைக்குக் கார்மழையே
நேராம இதுவே நிசம்.

—வ. சு. செங்கல்வராய பிள்ளை.

கண்ணென வந்தவர்!

பெண்ணின் பெருமை ஓங்க
மண்ணில் அடிமை நீங்க
கண்ணென வந்தவரடி—கிளியே
கலியாண சுந்தரரடி!

ஏழைகள் வாழவந்தார்
இளைஞர்கள் ஓங்க வந்தார்
யாவரும வாழ வந்தார்—கிளியே
எங்கள்பெருந் தலைவரடி!

சாதி சமயச சண்டை
சாயப் பொதுமை கண்ட
சமரச ஞானியடி—கிளியே
தமிழ்க்கலி யாணனடி!

—டாக்டர் S. தருமாம்பாள்.

தமிழே மூச்சு!

அன்புக் கடலே! அருந்தமிழ்ப் பெரியோய்!
திரு வி க வெனும் திறல்மிகு சான்றோய்!
உன்றனைப் பிரிந்து தமிழுயிர் வாழுமோ?
என்றனல யாதும இயமப இயன்றில
தமிழ்மலை சாயந்தது தமிழரண் உள்ளதென்
றிறுமாந் திருந்தனம் எந்தமிழ் அண்ணால்!
காலமல் வாக்கா லத்தில் நம்மை
காலன வயத்தில் கதற விட்டோம
தமிழே மூசசாயத் தனித்து வாழ்ந்தோய்!

—வித்துவான் வி. பொ. பழனிவேலன்.

தமிழ்ப் பெரியார்!

எல்லார்க்கும் பொதுமையராய் இலங்குதிரு வள்ளுவர்போல்
சொல்லார்க்கும தமிழ்ப்பெரியார் கலியாண சுந்தரனார்
பல்லார்க்கும் உரியரெனப் பலகட்சி களும்போற்ற
நல்லார்க்குள் நல்லாராய் வாழ்ந்திருந்தார் நமைப்பிரிந்தார்!

அறைவதெங்ஙன்? அந்தோ! நம் தமிழகத்தின் அவலநிலை!
செறிவுமிகத் தமிழ்வானில் திங்களும்நன் ஞாயிறும்போல்
கறையில்புகழ்க் கலியாண சுந்தரனார் கலைஞருயர்
மறைமலையார் எனஇவர்தாம் வயங்கிவந்தார்! மறைந்தகன்றார்!

—புலவர் முருகவேள், பி.ஓ.எல்.

தீந்தமிழ்த் தந்தை!

திருவுறு விருத்தா சலகலி யாண
சுந்தரத் தீந்தமிழ்த் தந்தை!
உருவுறு நான்தொட் டுலகியல் உணர்வும்
ஓங்குமுள் ஒளிபெருக் குணர்வும்
கருவுறு செல்வம் எனக்கவின் பெறவே
கதிரவன் இருள்துமித் தொளியைப்
பருவரல் உலகம் அடைதரா வண்ணம்
பரப்புதல் போல்அறி வொளியை.

நந்தமிழ் நாடோ நானிலத் தியங்கும்
நாகரி கத்துறை நாடும்
எந்நல் நாடும் ஏற்றுப்போற் றிடுமா
றின்னுரை வழங்குநற் கொண்டால்!
செந்தமிழ்த் தூய்மை செறிதேச பக்தன்
தினப்பதிப் புடன்நவ சக்தி
பைந்தமிழ்ப் புலவர் உரைவளம் பெற்றே
பாங்குற நடத்தினை பன்னாள்.

முன்னையான் பதிதொல் காப்பிய மூலம்
முதன்மைய தென்றுநல் மதிப்புச்
சொன்னஅம் மதியோ டென்னையும் வல்ல
நாட்டறம் சொற்றிட வைத்தாய்!
உன்னையும் அன்னை இயற்கையும் உணர்ந்தோர்
உனதுடல் மயிலைநன் காட்டில்
மனப்பதைத் திரளோ மைலெனச் சூழ
வனிக்கிரை ஆக்கினா யாந்தோ!

—பு. சீ. புன்னைவனநாத முதலியார்.

நெஞ்சே! இதுகேள்!

தொண்டுக் கொருவன் தூயதமி ழுக்கொருவன்
பண்டை நெறியுணர்த்தும் பான்மையன்—அண்டினரை
ஆதரிக்கு நல்லோன் அருளார் திரு வி.க.
தீதகற்ற எங்குற்றான் சென்று?

நெஞ்சே! இதுகேள்: நம் நேயன் திரு வி க
வஞ்சமிலா தென்றுநாம் வாழ்தற்கு—விஞ்சியசீர்
நூல்கள்பல தந்தான்; நுவலுதும்வா, மற்றவன்போல்
சால்புற்று நிற்போம் தழைத்து.

—வித்துவான் மே. வீ. வே. பிள்ளை.

தமிழ்த்தென்றல் தலைவா!

தமிழ்நாட்டார் செய்தவத்தின் கனிப்பேறே!
　　தமிழ்த்தென்றல் தலைவா! எங்கள்
அமிழ்தமொழி உயர்ந்திடவே அனுதினமும்
　　உழைத்திட்ட அண்ணலே! வாய்மை
கமழ்கின்ற கலியாண சுந்தரனே!
　　கருணைபொழி கடலே! செம்மைத்
தமிழ்ப்பெரியோய்! மறைந்தனையோ? என் செய்வோம்!
　　என்செய்வோம்! தந்தாய், அந்தோ! (௧)

பெண்மணிகள், தொழிலாளர், பிறகுழுவும்
　　சமயத்தார் விரும்பி என்றும்
கண்மணியாம் தலைவனெனக் கருதிவாழும்
　　விளங்கிடுவாய் கருத்தும் நிறைந்து
திண்மையுறும் இளைஞர்களும் சூழ்ந்திடுவர்
　　திரளாகத் தீரர்ப் போல
வண்மையுறு சொல்வன்மை செயலாற்றல்
　　வாய்மையுறு பணியாளனேயார்? (௨)

உலகமெலாம் குடும்பமென ஒன்றாக்கும் பெருங்
　　கொள்கைகளை உரைத்தாய், நாட்டில்
கலகமெலாம் நீங்கிடவே நயமான
　　வழியினிலே கருத்தைத் தந்தாய்,
இலகுமெழிற் பார்வையினை இழந்தாலும்
　　தமிழகத்துப் பார்வையாக்கியே,
திலகமென விளங்கியவா திரு.வி.க.
　　நின்பெருமை செப்பற் பாற்றே? (௩)

பாட்டாலும் உரையாலும் பைந்தமிழும்
　　தமிழகமும் பாங்காய் வாழ
நாட்டினிலே புரிந்திட்ட நற்பணிகட்
　　களவில்லை நாமுந்தான் நின்றன்
ஏட்டினிலே பொறுத்தை மனமகிழ்கின்ற
　　இன்பத்தை என்னென்று சொல்வோம்!
ஊட்டியநல் வாய்மைக் கொள்கையெலாம்
　　உலகத்தார்க் குரிமை யன்றோ? (௪)

மறைந்தாலும் புகழுடலாம் மறையாது
　　ஒளிவீசும் மணிவிளக்கே!
நிறைவான அறிவுருவே! நோன்மைக் கார்
　　தனியுருவே! நினைவே என்றும்
திறமான உள்ளத்தால் உரைகளிலெல்
　　தெளிவுடனே வழங்கிநிற்போம்
மறவாதே நின்கொள்கை உலகமெலாம்
　　பரவிடவே விரும்பி வாழ்வோம் (௫)

—தணிகை, உலகநாதன்.

திரு. வி. க. வின் சேமவைப்பு

[செல்லூர்க்கிழார் திரு. செ ரெ. இராமசாமிபிள்ளை]

செந்தமிழ்த் திருமகனார் திரு. வி. க. நமக்குச சேமவைப்பாக வைத்தவை, அவா அருளிய ஐம்பதுக்கு மேற்பட்ட உரைநடை, பாநடைகளால் அமைந்த நூற்கள. அவையாவும் செந்தமிழ் வளம துறுமிய ஓவியஙகள் ஆகும். அவை கருத்துச் செறிவும், உரைவளமும செறிந்தவை. அதனகண அமைந்திருக்கும் சொற்கள் முழுதும் உயிரப்புள்ளவை. அவைகளைப் படித்து இடைவிடாது பயிலவோர் வீரம, அறம், அன்பு, அருள், அறிவு முதலியவற்றில் சிறந்தாராவதொருதலை. திரு. வி. க. இயற்கை அறிவூற்று. அவ்வூற்றிலிருந்து சுரந்து பெருக்கெடுதது வந்தவையே இந்நூல் வைப்புநிதிகள். இவைகள் எக்காலததும வாடாத பொன்மலர்கள்; மென்மலாகள்; நனமலாகள், மணமலாகள்; இவைகளில் தோயத் தோய அவை, ஒருமகனை அந்தணமை வழியில கொண்டு நிறுததும். இவா மனத்தடத்து நிலைதத சமயநெறி சைவநெறி அந்நெறி, திரு. வி. க. உள்ளத்தடத்தில் பொதுநெறியாகப் பன்மையில் ஒருமையாகக் கிளர்ந்துள்ளது. அக்கிளர்வில் பூததவை, திருமால அருளவேட்டல, கிறிஸது வின அருள்வேட்டல், கிறிஸதுமொழிக குறள், சமரசதீபம, அருகன் அருகே முதலிய அரிய நூலகள். மேலும் பொதுநெறிகொணடு ஆற்றிய சொறபொழிவுகள் நூல்வடிவில உருவாகியுள்ளன. அவைகளெலலாம் சுவைத்துப்படித்தற்கேற்ற அழகுமிககவை. அவைகளுட் சில :

(க) மனிதவாழ்க்கையும காந்தியடிகளும்

(உ) பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைததுணை

(ங) இந்தியாவும விடுதலையும்

(ச) தமிழ்த தென்றல் அல்லது தலைமைப் பொழிவு

(ரு) பரம்பொருள் அல்லது வாழ்க்கைவழி

(சு) நாயன்மாா வரலாறு

(எ) இருமையும ஒருமையும

(அ) முருகன் அல்லது அழகு

(கூ) சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து

(க0) இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம

(கக) முடியா? காதலா? சீர்திருத்தமா?

(௧௨) என் கடன் பணிசெய்து கிடப்பதே

(௧௩) சைவத்தின் சமரசம்

(௧௪) சைவத்திறவு

(௧௫) சன்மார்க்க போதமும் திறவும்

(௧௬) தமிழ்நாடும் நம்மாழ்வாரும்

(௧௭) இமயமலை அல்லது தியானம்

(௧௮) கடவுள் காட்சியும் தாயுமானாரும்

(௧௯) சித்தமார்க்கம்

(௨௦) தமிழ் நூல்களில் பௌத்தம்

இன்னும் பல நூல்களுமாகும். இவ்வழியா உடலங்களை என்றும் நிலவுமாறு செய்யவேண்டுவது, நம் தமிழக மாந்தர் கடமையும், உரிமையுமாகும். எத்தனை எத்தனை நூல்களை தேடுவாரற்றுக் கறையான் உண்டு பசியாறிற்று; மண்கொண்டு மறித்தது, கடல்கொண்டு செறித்தது. மக்கள் வெற்றாரவாரமான நூல்களைப் படிக்கின்றனர். அந்நூல்கள் பெயரளவில் நூலாகுமேயன்றி நூல்வரிசையில் சேர்த்தெண்ணப்படா. அவைகளைக் கற்பதால் கருத்து ஒன்றுமின்றாயப் படித்த அளவோடு முடிவதன்றி மக்கள் மக்களாக வாழவேண்டிய வழியைக் காட்டா; ஒழுக்கத்தினின்றும் இழுக்கத்துக்கே கொண்டுசேர்க்கும். நம் திரு. வி. க. நூல்களில் கலைகள் உண்டு; கருத்து உண்டு; இயற்கை உண்டு; செயற்கை உண்டு, அதில் ஞாயிற்றொளி; திங்கள் வெண்கதிர்; கடலின் கருநிறம்; பொழில், வயல், கா, யாறு, மலை முதலிய காட்சிகளும் உண்டு. இவ்வியற்கைகளிடையே செந்தமிழணங்கின் அழகொளி, மின்னி மின்னிக் காட்சி நல்கும்; இவ்வொளியினிடையே உள்ளொளி கிளர்ந்து உயர்ந்து தோன்றும். அவ்வியாவினாலே மக்கள், அஃறிணைப் பிறவிப்பற்று உயர்திணை மக்களாய் இலகுவர். அச்சிறப்பை நல்குவது நம் திரு. வி. க. தந்த சேம வைப்பாம் திரு நூல்கள். இவைகள் மறு மறு பதிப்புத்தோன்றி, உலகில் நன்னெறியை வளர்க்குமாறு செய்யவேண்டுவது தமிழக மாந்தர் தனிப் பெருங்கடமை. அவ்வழியே கருத்தூன்றிப் படாத தமிழ்மக்களைப் பணிவுடன் வேண்டுகின்றேம்.

பொன்மொழிகள்

வாழ்க்கை உள்ளொளியைக் குறிக்கொண்டு அமைந்து தோன்றுமின், அது மாண்புடையதாகும்.

உள்ளொளிப்பேறே வாழ்க்கையின் குறிக்கோள்


திரு வி. க.

இயற்கைப் போக்குக்கு அரணாக வாழ்க்கையை நடத்துவது அறம்

இறைவன் செந்நிறம்; இறைவி நீலநிறம்

இறைவனை மறத்தல் நன்றி கொல்வதாம.

கடவுட் காட்சிக்கு அக் கடவுள் துணை இன்றியமையாதது, அத்துணையுடன் உயிர்கள் முயற்சியும் வேண்டும.

ஆராயப்புகும் ஒவ்வொரு பொருட்கண்ணும் அறிவு விளங்க விளங்க அவ்வப்பொருளைப்பற்றிய அறியாமை தேய்தல் பெறுகின்றது

ஆண்டவன் ஆன்மாவை அறியாமையினின்றும் எடுத்துத் தன்னைப்போலாக்குதற்கு மாயை என்னும் கருவியைக் கொள்கிறான். அம்மாயையின் காரியமே இவ்வுடல் உலகம் முதலியன.

கடவுளைக் காட்டும் செந்நெறியே சமயம் சமயநெறியில்லாதவர் மக்களல்லர் சமயங்களைத் துருவித்துருவி ஆராய்ந்தால் அவற்றின் அடியில் சமரசம் நிலவுவது காணப்படும். சமரசம் கடவுட் காட்சிக்குரியது.

இளமையில் யான் பயின்ற சில ஆங்கில நூல்களினும் தமிழ் நூல்களினும் பொருளாக மகாத்மா காந்தி என்னறிவில் இன்று விளங்குபவரானார். அவ்விளக்கம் அரணாக நின்று என் வாழ்வைப் பண்படுத்திவருகிறது

முன்னைய வாழ்வில் நிகழ்ந்த பல மாறுதல்களுள் இரண்டு எனது நினைவில் அடிக்கடி உறுவது வழக்கம்: ஒன்று, யான் இரவும் பகலும் ஒரு பெருங் காதல்கொண்டு சென்னை வெஸ்லி கலாசாலையில் ஆங்கில மயமாக நின்று பயின்று மெட்ரிக்குலே

ஷன் பரீட்சைக்குப் போகுந்தறுவாயில் எனக்குத் தேனென இனித்துவந்த ஆங்கிலத்தை வேம்பெனக் கைக்குமாறு செய்து என் மனத்தை அந்தமிழில் தோய்த்தாண்ட யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் கூட்டுறவு இன்னொன்று, பின்னைப் பலாபால் தமிழ் பயின்று அவ்வெஸ்லி கலாசாலையிலேயே தலைமைத் தமிழாசிரியனாய் அமர்ந்திருந்தபோது பலப்பல பாடப் புத்தகங்கள் எழுதுதற்குச் செய்யப்பெற்ற ஏற்பாடுகளை வெட்டி அம்முயற்சியில் தலைப்பட்ட நேரத்தில் ஐரோப்பாப் பெரும் போரிடை நமது தேசத்தில் எழுந்த சுயஆட்சிக் கிளர்ச்சியும், அதுபோழ்து நேர்ந்த அன்னை பெசண்ட் அம்மையார் சிறைக் காவலும் அம்முயற்சியைத் தகைந்து 'தேசபக்தன்' (தினத் தாள்) ஆசிரிய பீடத்தை ஏற்குமாறு செய்தமை.

எனக்கு இனிய நண்பரென யான் நினைந்துகொண்டிருந்த சிலர் அரசியல் கருத்து வேற்றுமையை மன வேற்றுமையாகக் கொண்டு என்மீது சொல்லம்புகளை பெய்தனர். அவ்வம்புகள் எனது மெலிய நெஞ்சிற் பாயும்போது, அந்நண்பர்க்குக் கேடு சூழும் எண்ணம் நினைவளவிலும் எழாத உறுதியும் ஆற்றலும் என்பால் இல்லையேனும், காந்தி அடிகளின் அருளுரைகள் எனக்கு அவ்வுறுதியையும் ஆற்றலையும் தந்தன.

யான் பொருட்பேறு பெறாத ஏழையேன். மனித வாழ்க்கைக்கு இலக்கியம் மகாத்மா.

சமரச ஞானமாவது எங்குமுள்ள கடவுள் காட்சிபெற்று இரண்டறக் கலந்து பிறவா இறவா நிலையுடையதாகும்.

நல்லியல்பை விழையும் ஒருவன் சத்தியத்தை உண்டுவருவானாக. சத்தியத்தை (உண்மையை) இடையறாது உள்ளிவருவானுக்கு ஆண்டவன் அருள் கூடும்.

நமது நாட்டில் தாய்மொழிவாயிலாகக் கிடைக்கப்பெறும் வாய்மொழிப் பேச்சுக்கு உள்ள ஆற்றல் வேறெதற்கும் இல்லை. தமிழப் புலமையுடையார் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயின்று தமிழ்த்தாய்க்குத் தொண்டுசெய்தல் நலம்.

உரிமை வேட்கையை மக்களிடை எழுப்பவேண்டுதற்கு அடிப்படை தாய்மொழி.

ஆக்கவேலை பட்டணங்களில் நடைபெறல் அரிது; அவை கட்குத் தக்க இடம் கிராமமேயாகும்.

நம்மைச் சுற்றிலும் உள்ள தெய்வங்களாகிய மக்களை உயிர்களை வழிபடுவோமாக. நாம் வழிபடவேண்டிய முதற்கடவுளர் நமது சொந்த நாட்டவர்களேயாவர்.

தொண்டர்படையில் சேர்வோர் உயரிய செல்வ வாழ்வை விரும்பலாகாது. அவ்விருப்பம தியாக உணர்வை அழிப்ப தாகும். அகிம்சா தருமம என்னும் அருள்நெறி பரவினாலன்றி உலகம உயயாது. இதனைப் பரப்பவேண்டியவர்கள் தொண்டர் களே. பணியில் பெரிதுமில்லை, சிறிதுமிலலை, பணி பொது.

ஆன்மா தேகத்தோடு தொடர்பு கொண்டுள்ள நிலையை ஏற்படுததுவது கடமை.

பெண்மையினின்று தாய்மையும, தாய்மையினின்றும் இனி மையும் மலர்கினறன.

பெண் ஆண பிறவியில உயாவு தாழ்வு என்பது கிடை யாது உரிமை இருபாலார்க்கும உரியது.

உரிமையே மக்களின் உயிரணி அவ்வணி இழந்தவர் மக்களாகார், அவர் உயிர்நிலை அறறவர், என்புதோல போரத்தவர்.

காதலின் பெருமை காதலில் ஈடுபட்டவாக்கே புலனாகும.

உடன் பிறநதவரை நேசியாதவர் உலகை நேசிததல அரிது.

அன்புக்கு உறையுள பெண்மை. தனித்த ஆண்மையில் அன்பு சுரவாது

சமரச சன்மார்க்க சங்க அமைப்பு—தலைமை—இறை. அமைச்சு—இயற்கை. நிருவாகர்கள்—குருமாாகள். உறுப்பி னர்கள—உயிர்கள சநதா—இரக்கம

மன உணர்வினர் சத்தினை நேரே உணர்தல் இயலாதாயி னும், இயற்கையைககொண்டு சததின் இருபபை உணாதல் கூடும்.

இயற்கைக்கும இறைக்கும் உள்ள தொடாபு பிரிவற்றது

இயற்கையை அன்னை எனறும, இறையை அப்பன் எனறுங் கூறுவது கவிமரபு. வாழ்த்தும வணககமும மெயயனபுவழி நிகழ்தல்வேண்டும

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்துவோர் ஆததிகர். அவ்வாழ்வு நடாத்தாது வேறுவழியிற செலவோர் நாததிகர்

இயற்கைக் குணத்துக்கு மாறுபட்ட செயற்கைக் குணததை நீப்பது துறவாகும். பெண்ணின் துணையால் ஞானவுணர்வு

பெற்ற பெரியோர்கள் தாய்மைப் பெண்ணை ஒருபோதும் குறை கூறமாட்டார்கள். அவர்களிடத்தும் கடவுளைக் காண்பார்கள். பெண்ணிடத்துள்ள இறைமை அவர்கட்கே நன்கு புலனாகும். குடும்பச்செலவுக்குப்போய்ப் பொருள் எஞ்சிநிற்குமாயின் அதனைக் கலவிச்சாலை, தொழிற்சாலை, வைத்தியசாலை முதலிய அறச்சாலைகட்குப் பயன்படுத்தல் வேண்டும். இதுவே மன்பதைக்குத் துணைபுரியும் முறைமை.

தாய்மொழிவழிக் கல்வி பயில்வது இயற்கைக்கு அரண் செய்வதாகும். நாட்டுக்கலைகள் நாட்டின் உயிர். இதனை அழியுமாறு இடந்தரும் நாடு இயற்கை இன்பம் நுகர்தல் அரிது.

பிறப்பில் மக்கள் எல்லாரும் சமத்துவமானவர்கள். இன்ப துன்பங்கள் எல்லார்க்கும் பொது அன்பு அகநோக்குப் பெருக்கத்துக்கு உறுகருவி. உயிர்க்கும் இறைக்கும் உள்ள தொடர்பு இயல்பாயிருப்பதைத் தெளிவது அநுபூதி எனப்படும்.

இயற்கையோடியைந்த வாழ்வு சமய வாழ்வாகும். சுகாதாரத்துக்கு அரண்செய்யும் புறக்கோலங்களால் தீங்கில்லை.

சமய வாதம் பொல்லாதது, இழிந்தது.

சத் ஒன்றே, அதற்குரிய மார்க்கமும் ஒன்றே.

கலப்புமணம் இயற்கையினபாற்பட்டது. அது பலதிற வேற்றுமைகளைக் களையவல்லது.

அகத்தூய்மை அற்ற புறத்தூய்மையாற் பயனில்லை.

நல்லெண்ணங்கள் உயிரையும் உயிர்வழி உடலையும் ஓம்பும் அமிழ்தம்.

இலட்சம் பிரசாரகர்கள் முயற்சியினும் ஒரு நல்லோன் விரதமும் தியானமும் பெருநலம் செய்யும்.

அஃறிணை உயிர்களின் வளர்ச்சிக்குக் கேடு சூழ்வோரின் வளர்ச்சியும் தடைபடுதல் இயல்பு

நிதியுள்ள இடத்தில் பெரிதும் நீதி இருப்பதில்லை.

குறைகளை உணர்ந்து அவைகளைப்போக்க முயல்கின்றவன் சன்மார்க்கத்தில் நிற்க முயல்பவனாவான்.

பெண் ஆணை வெறுப்பதும், ஆண் பெண்ணை வெறுப்பதும் துறவு என்று சொல்லப்படுவது தவறு.

ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழ்வது அறம். பருமை உருவங்களைக் கொள்வது வெளிமனம், நுண்மை உருவங்களைக் கொள்வது உள்மனம்.

உடல் இறை கோயில். அதை நோய்க்குடில் ஆக்குவது தவறு. மலச்சிக்கலே எல்லா நோய்கட்கும் தாயகம்.

மல நஞ்சேறப்பெற்ற மூளையினர்க்கு அமைதித்தியானம் கூடுதலரிது. தியானம் உடல்நலனுக்கும் உயிர்நலனுக்கும் வேண்டற்பாலது நோன்பிகட்கு மலம் சிக்குதல் இல்லை.

நாட்டின் உயிர் காடு, நாட்டைக் காப்பது காடு. பசுமைக் காட்சி வழங்காத ஊர் பாழ்.

கதிரொளி பசிலைகள்வாயிலாக உடலில் படர்வது நல்லது. தெய்வமறையின் நிலைமூன்றில் மோனத்தினின்றும் ஒலியும், ஒலியினின்றும் மொழியும் பிறக்கும்.

காதல் என்பது தெய்வத்தன்மை வாய்ந்தது, அது காமமன்று. காதலரிடம் காதலே வீறுகொண்டு நிற்கும்.

நாகரிகக் கூறுகளாகிய கண்ணோட்டம் உரிமை என்பவற்றுள், பெண்ணுரிமையினின்றும் அரும்பி மலர்வது நாகரிகம். உரிமைகளுள் உயிர்போன்றது காதல்வழி மணஞ்செய்துகொள்ளும் உரிமையே.

விவேகானந்தர் சொற்பொழிவுகளை நன்மனங்கொண்டு வாசிப்போர் ஏட்டு வேதாந்தங்களை விடுத்து வீறுகொண்டு எப்பற்றுமின்றி உயிர்கட்கு ஊழியஞ்செய்யப் புறப்படுவர்.

துவித வழிபாடே அத்துவித ஞானத்தை உண்டுபண்ணுவதாகும். மெய்கண்டார் துவிதவழி அத்துவித உண்மையை அறிவுறுத்தி உலகைச் செம்மைநெறியில் நடாத்தும் இயல்பினதாய்ப் பொலிகிறது.

சைவசித்தாந்திகள் எச்சமயத்தாரையும் தங்களுக்கு மாறுபட்டவராகக் கருதலாகாது

தொகுத்தோர்.

பு. சி. புன்னைவனநாத முதலியார்

திரு. வி. க வின் வாழ்க்கைக்
காலக் குறிப்பு

12 9-1831 திரு. வி. உலகநாத முதலியார் பிறப்பு.

26-8-1883 தமிழ்ப்பெரியார் திரு வி. க பிறப்பு

1890 துள்ளம் கிராமத்திலிருந்து இராயப்பேட்டைக்குக் குடியிருப்பை மாற்றுதல்.

1891 இராயப்பேட்டை ஆரியன் பிரைமரி பாடசாலையில் சேர்தல்.

1894 வெஸ்லி கலாசாலையில் சேர்தல். சில மாதங்கட்குள் பத்திய முறிவால கால் கைகள் முடங்குதல்.

1894—1898 படிப்புக்கு ஓய்வு.

1898 மீண்டும் வெஸ்லி கலாசாலையில் சேர்தல்.

1901 டிசம்பர் கதிரைவேற் பிள்ளையவர்களைச் சந்தித்தல்.

1901—1906 கதிரைவேலரின் மாணாக்கராய்ப் பயிற்சி பெறுதல்.
1903—ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை தொடங்குதல.

1904 கதிரைவேற் பிள்ளை வழக்கில் சான்று கூறுதல் மெற்றிகுலேஷன் பரீட்சைக்குச் செல்லத் தீர்க்கெடுக்கப்படாமை, பள்ளிக் கூடப் படிப்பின முடிவு.

11-9-1905 தந்தையார் சிவபதமடைதல்.

1906 'புக் கீப்பிங்' பயிற்சி பெற்றுத் தேறுதல்

26-3-1907 கதிரைவேற்பிள்ளை கந்தனடி சேர்தல்.

1907 கடற்கரையில் விபினசந்திரபாலர் சொற்பொழிவுகளைக் கேட்டல.

1907—1908 ஸ்பென்ஸர் கம்பெனியில் வேலை பார்த்தல்.

1908 கதிரைவேற் பிள்ளை சரிதம் இயற்றல.

1908 திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டம் தொடங்குதல்

1908—1910 மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம சித்தாந்த சாத்திரம பயிலுதல்.

1908—1910 'உமாபதி குருபிரகாசம் பிரஸ்' தொடங்கிப் பெரிய புராண உரை வெளியிடல்

1908—1915 திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் பெரியபுராணம் முதற்காண்டம் சொற்பொழிவு செய்து முடித்தல்

1908 ஜஸ்டிஸ் ஸர் டி. சதாசிவ ஐயரவர்கள் நட்புப் பெறுதல்.

1910 அன்னிபெசண்ட் அம்மையாரைச் சந்தித்தல்.

1910—1916 ஆயிரம்விளக்குப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய்ப் பணிபுரிதல்.

1911 டிசம்பர், சைவசித்தாந்த மகாசமாஜத்தில் முதன்முதல் சொற்பொழிவாற்றுதல்.

13-9-1912 கமலாம்பிகையாரைத் திருமணம் புரிதல்.

1912—1918 இல்லறம் நடத்துதல்

1912 டிசம்பர், காஞ்சிபுரத்தில் மணம்பூண்டி குமாரசாமிப் பிள்ளையின் நட்புப் பெறுதல்.

1913 பட்டினத்தார் பாடல்கட்கு உரை எழுதுதல்.

1913 டிசம்பர், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் சைவ சித்தாந்த மகாசமாஜ விழாவில் பேசுதல்.

1914 சுப்பராய காமத் சந்திப்பு

1914 எஸ் சீனிவாச ஐயங்கார் நட்பு.

1915 புதுப்பாக்கம் சிவசுப்பிரமணிய பக்தஜன சபையின் தோற்றம்.

1916 ஜூன், வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராதல்.

1916 டிசம்பர், ஜஸ்டிஸ் கட்சியின் பிறப்பு.

1917 காஞ்சிபுரத்தில் வாடியாவின் கேண்மை.

7-12-1917 "தேசபக்தன்" பத்திரிகாசிரியராதல்.

1917 நவம்பர், மாகாணச்சங்கக் காரியதரிசிகளுள் ஒருவராதல்; டாக்டர் வரதராஜுலு நாயுடுவைக் காண்டல்

5-12-1917 வெஸ்லி கல்லூரித் தமிழாசிரியர் பதவியிலிருந்து விலகுதல்

8-12-1917 சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரை முதன்முதல் காண்டல்.

27-4-1918 சென்னைத் தொழிலாளர் சங்கம் தோன்றுதல்.

18-9-1918 மனைவியார் கமலாம்பிகையம்மையார் சிவபதமடைதல்

28-2-1919 'தேசபக்தன்' ஈடுகாணம் பறிமுதல் செய்யப்படுதல்.

6-4-1919 காந்தியடிகளை முதன்முதல் காண்டல்.

18-3-1919 சத்தியாக்கிரக நோன்புநாள்.

12-6-1919 லார்ட் வில்லிங்டன் தேசியப்பத்திரிகாசிரியர்கட்கு எச்சரிக்கை வழங்குதல்.

1919 ஈ. வே. இராமசாமி நாயக்கர் நட்புப் பெறுதல்.

17-12-1919 பாலகங்காதர திலகர் காட்சி

11-1-1920 அன்னிபெஸண்ட் அம்மையாருக்கு வரவேற்பு.

4-7-1920 மத்தியத் தொழிலாளர் சங்கம் பிறத்தல்.

22-7-1920 "தேசபக்தன்" ஆசிரியர் பதவி நீத்தல்.

21-10-1920 பக்கிங்காம் மில் கதவடைப்பு

22-10-1920 "நவசக்தி" பத்திரிகை தொடங்குதல்.

11-11-1920 தொழிலாளர் இயக்கத் தலைவர்மீது வழக்கு.

1920—1929 பல அரசியல் மாநாடுகளில் தலைமை தாங்கலும் பேசுதலும்

27-1-1921 மில் கதவடைப்பின் முடிவு.

20-6-1921 மீண்டும் வேலை நிறுத்தம்.

5-7-1921 லார்ட் வில்லிங்டனுடன் சந்திப்பு.

9-8-1921 வழக்கு நிறுத்தம்.

10-8-1921 எயலிங் கமிட்டி விசாரணை.

29-8-1921 டிசம்பர் துப்பாக்கிப் பிரயோகம்.

1921 வேலைநிறுத்த முடிவு.

21,22-11-1925 காஞ்சிபுரத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்மாநாட்டுத் தலைமை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானம் புறக்கணிக்கப்படுதல். ஈ வே. ரா. முதலியோர் வெளியேற்றம்.

1926 தென் இந்திய ஜீவரக்ஷா சபையின் பிறப்பு.

25-2-1927 சாபூர்ஜீ சகலத்வாலா சந்திப்பு.

9-10-1928 தமையனார் புதல்வன் திரு. உ. பாலசுப்பிரமணியம் சிவபதமடைதல்

1931 சென்னைத் தொழிலாளர் சங்க நிலையத் திறப்பு விழா.

1933 டிசம்பர் மாமண்டூரில் உழவர் வேலை நிறுத்தம்.

1934 ஜூலை சைவ சித்தாந்த மகாசமாஜத் தலைமை.

1937 காங்கிரஸ் மந்திரி சபை அமைத்தல்.

1939 காங்கிரஸ் ஆட்சியில் மில்வேலை நிறுத்தம்.

1940 ஜனவரி திருவொற்றியூரில் பஸ் நிறுத்தம்.

1941 திருவாட்டி இராதாமணியம்மையாருக்கு "நவசக்தி" பத்திரிகையைத் தருதல்.

14-4-1943 சென்னைத் தொழிலாளர் சங்க வெள்ளி விழா.

24-8-1943 திரு வி. க. அறுபது ஆண்டு நிறையப்பெறுதல்.

19-1-1943 பெத்துநாயக்கன்பேட்டையில் திரு. வி. க. மணி விழா.

25-8-1943 முதல் பல நாட்கள் மணி விழாக் கூட்டங்கள்.

27, 28, 29-12-1943 மதுரையில் சைவர் மாநாட்டுத் தலைவர்.

30, 31-12-1943 காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்தில் வெள்ளி விழாத் தலைமை.

12-2-1944 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு நூல் வெளியீடு.

1945—1946 தமிழ்த்திருமணங்கள் நடாத்தி வைத்தல்.

11-3-1947 மில்தொழிலாளர் வேலை நிறுத்தம்.

29-3-1947 அந்தோணி பிள்ளை சிறை—திரு. வி. க. மீண்டும் மில் தொழிலாளர் சங்கத் தலைமைப் பதவி.

9-6-1947 திரு வி. க. இல்லத்தில் போலீசார் காவல்

7-7-1947 திரு வி. க இல்லச் சிறைவாச நீக்கம்.

7-12-1947 தமிழாசிரியர் தூக்கவூர் இறுதிக் கூட்டம். மொழியாசிரியர் மாநாடு

14-8-1948 சென்னைமாகாணத் தமிழாசிரியர் மாநாட்டில் சுந்தரம் பிள்ளை படத்திறப்பு

1949 கண்ணில் படலம்—ஒரு கண் பார்வை மறைதல். 'பரம் பொருள்' நூல் எழுதுதல்.

1950 இரு கண்களும் ஒளி இழத்தல். 'இருளில் ஒளி,' 'அருகன் அருகே' முதலிய நூல்கள் எழுதுதல்

20-10-1951 'முதுமை உளறல்' என்னும் இறுதி நூல் எழுதுதல்.

5 1-1952 டாக்டர் தருமாம்பாள், சிவ - முத்து மணிவிழாவில் தலைமை கொண்டமை.

3-9-1952 எழுபதாம் ஆண்டின் துவக்கம் காரணமாக 'எழுபதின் எழுச்சி' என்னும் அரிய செய்தியை மாணவர் மன்றம் மூலம் இளைஞர்கட்கு அறிவித்தல்

24-8-53 முதல் 16-9-1953 வரையில் சென்னை மாகாணம் முழுதும் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடுதல்.

6-9-53 இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் திரு. வி. க மணிமண்டபம் நிறுவுதற்குத் தீர்மானம்

17-9-53 இரவு 7-45 மணி: தமிழ்ப்பெரியார் திரு வி க இறை திருவடிப்பேறெய்துதல்

18-9-53 பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரையில் கூலித் தொழிலாளர் நிலையத்திலிருந்து மயிலைமாநகர் நன்காடு நிலையம் வரையில் மாபெரும் ஊர்வலம்

18-9-1953 இரவு 7 மணிக்குமேல் மயிலைமாநகர் நன்காடு நிலையத்தில் பெரியார் திரு. வி. க. அவர்கள் பொன்னுடலம் எரியூட்டப் பெறல்.

சமயம்

இன்பப் பொருளாம் இறைவனை அடைதற்கு உயிர்கள் கடைப்பிடித்தொழுகும் ஓர் அறவழியே சமயம் என்று கூறலாம். சமயமென்ப தொன்றில்லையேல் உலகில் அறமேது? அன்பேது? ஆன்ம உணர்வேது? மக்களை விலங்கினின்றும் பிரித்து, அவர்களைச் செந்நெறியில் நிறுத்தி, ஆண்டுவருவது சமயமெனில், அதன் பெற்றியை என்னென்று கூறுவது?

திரு. வி. க. சைவத்தின் சமரசம்—பக்கம் - அ.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ சுப்பையா.